# அனல்

புதுமலர்: 12 இதழ்: 03 வைகாசி - ஆனி

அசதியாயிராமல் ஜாக்கிரதையாயிருங்கள்

ஆவியிலே அனலாயிருங்கள்

கர்த்தருக்கு ஊழியம் செய்யுங்கள்

– ரோமர் 12:11–

ஆசிரியர்:
வே.மகாராஜா

சீயோன் தேவாலயப் பிரசுரம்
ZION CHURCH PUBLICATION

01.05.2015

# பொருளடக்கம்


- அனலின் குரல்
- கதையும் கற்றதும் - வெளிநாடு போகணுமா?
- வாலிபர் வளாகம் - யாருக்கு உபயோகம்?
- யார் என்னை விடுதலையாக்குவார்?
- பெண்கள் பக்கம் - தேவன் மருத்துவச்சிகளுக்கு நன்மை செய்தார்
- நற்செய்திப்பகுதி - நீ திகையாதே! கலங்காதே!
- பக்தர்களின் பயிலகம்
- குறுக்கெழுத்துப் போட்டி - 67
- கர்த்தர் சொன்னால் செய்வார்
- அருட்பணியாளர் சரிதை - எரிக் லிட்டல், எலிசா அக்னியூ
- வினா விடை - 69
- அனலின் ஆன்மீக விருந்து


## ஜெப வேண்டுதல்

வியாதியினாலும், வேதனையினாலும், குடும்ப பிரச்சினையினாலும் கலக்கமுற்று என்ன செய்வது என்று அறியாமல் திகைக்கும் தாயே, தந்தையே, சகோதரனே, சகோதரியே கலக்கம் வேண்டாம். உங்கள் பிரச்சினைகளையும் தேவைகளையும் எங்களுக்கு எழுதுங்கள். உங்களுக்காக ஜெபிப்போம்.





## எழுத வேண்டிய விலாசம்

**சீயோன் ஜெபக்குழு,**
**347, நாவலர் வீதி,**
**யாழ்ப்பாணம், இலங்கை.**

**Zion Prayer Group,**
**347, Navalar Road,**
**Jaffna, Srilanka.**

**மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி**

The Editor "Anal",
347, Navalar Road,
Jaffna, Srilanka.

**ஆசிரியர் "அனல்",**
**347 நாவலர் வீதி,**
**யாழ்ப்பாணம், இலங்கை.**



*T.P.: 0094(0) 21-222 2707 e-mail: jazion@sltnet.lk*

திக்கற்றவர்களாய் போகும் உன் பிள்ளைகளை ஒப்புவி, நான் அவர்களை உயிரோடே காப்பாற்றுவேன். உன் விதவைகள் என்னை நம்புவார்களாக. எரேமியா 49:11

# அனலின் குரல்

ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் நல்வாழ்த்துக்கள். மறுபடியும் அனலின் ஊடாக உங்களைச் சந்திப்பதில் மகிழ்ச்சியடைகிறேன். எம் உயிரிலும் மேலான ஆண்டவரின் கிருபைக்காக அவரை ஸ்தோத்தரிக்கின்றேன்.

மனிதனுக்கான பாவமன்னிப்புக்குரிய அனைத்தையும் ஆண்டவர் இயேசு செய்து முடித்துவிட்டார். தம்முடைய ஜீவனையும் அதற்காகக் கொடுத்தார். மரித்து மூன்றாம் நாள் உயிரோடு எழுந்தார். அருமையான வாசகர்களே ஆண்டவர் உங்களுக்கான அனைத்தையும் செய்திருக்கும்போது அவருக்காக நான் என்ன செய்தேன் என்ற எண்ணம் எப்போதாவது ஏற்பட்டதா? அவருடைய பிள்ளையாக, அவருடைய இரத்தத்தாலே கழுவப்பட்டவர்களாக எதையாவது அவருக்காகச் செய்ய உங்களை அர்ப்பணியுங்கள்.

சூசான் அரண்மனையில் வேலை செய்த நெகேமியா எருசலேமின் அலங்கம் இடிக்கப்பட்டுப் போய்விட்டது, தேவனுடைய ஜனங்கள் நிந்தையையும் தீங்கையும் அனுபவிக்கிறார்கள் எனக் கேள்விப்பட்டவுடன், அவன் உட்கார்ந்து அழுது, சில நாளாய்த் துக்கித்து உபவாசித்து மன்றாடி, பரலோகத்தின் தேவனை நோக்கி ஜெபித்தான். செய்வதற்கு ஒன்றும் இல்லையென நினைக்காமல் எனக்குப் பிரச்சினை இல்லையென எண்ணாமல் தேவனுக்காக பெறுமதியான ஒன்றைச் செய்ய முன்வாருங்கள். நீங்கள் வசதிபடைத்தவராக இருக்கலாம் அல்லது ஏழையாக இருக்கலாம் இயேசுவுக்காக, அவருடைய இதயத்துடிப்பை நிறைவேற்றுங்கள் (நெகே. 1:1-11)

- ஆசிரியர் -




**ப**க்கத்து வீட்டு ரமேஸ் வெளிநாட்டில் இருந்து மாதாந்தம் அனுப்பும் பணம் அந்த வீட்டை கொஞ்சம் எடுப்பாகத் தான் காட்டிக் கொண்டிருந்தது. அவனது மனைவி, பிள்ளைகள் உடுத்தும் முறைகள், அவர்கள் பாவிக்கும் கைத் தொலைபேசிகள், அவர்களது வீட்டில் இருக்கும் பொருட்கள் என எல்லாவற்றையும் பார்க்கும் கொன்சிக்கு கொஞ்சம் பொறாமையாகத் தான் இருக்கும். தனக்குள் நினைத்துக் கொள்வாள்: எனக்கும் ஒரு கணவன் இருக்கின்றாரே! அவரால் தனக்கு எந்தப் பிரயோசனமும் இல்லை என்று தனக்குள் நொந்துகொள்வாள்.

ஆனால் கொன்சியின் வீட்டில் இதுவரை சொல்லக்கூடிய விதத்தில் எந்த விதமான குறையும் இல்லை. கொன்சியின் கணவன் கொலின்ரஸ் வியாபாரம் செய்து வருகின்றார். உண்மையிலேயே அவர்களுடைய வியாபரம் கடவுளின் கிருபையால் நன்றாகவே நடைபெற்று வருகின்றார்கள். எந்தவிதமான கடன்களும் இன்றி சந்தோசமாக வாழ்ந்து வருகின்றார்கள். பிள்ளைகளும் தாயினதும், தந்தையினதும் அரவணைப்புடன் நன்றாக படித்துக் கொண்டிருக்கின்றார்கள். ஆனாலும் கொன்சிக்கு ஆடம்பரமான வாழ்க்கை தானும் வாழ வேண்டும் என்று தனக்குள்ளேயே மனக்கோட்டைகளைக் கட்டிக் கொண்டிருந்தாள்.

இவ்வாறு சென்று கொண்டிருக்கும் போது பக்கத்து வீட்டு ரமேஸ் வெளிநாட்டில் இருந்து அன்று வந்திருந்தான். அவன் தனியே வரவில்லை, தன்னுடன் ஒரு பெரிய வாகனத்தில் வெளிநாட்டுப் பொருட்களுடன் தான் வந்திறங்கினான். மாத்திரமா? அவனது கைகளிலும் கழுத்திலும் பொன் நகைகள் மின்னிக்கொண்டிருந்தன. அன்றைக்கு அந்த வீட்டில்

ஒரே அமர்க்களமாயிருந்தது. அவன் கொண்டு வந்திருந்த வெளிநாட்டு நகைகளை அவனது மனைவி அணிந்து கொண்டு மிகவும் எடுப்பாக எங்கோ புறப்பட்டுச் சென்றாள்.

இவை அனைத்தையும் பார்த்த கொன்சிக்கு இருப்புக் கொள்ளவில்லை. தனது கணவரையும் எப்படியும் வெளிநாட்டுக்கு அனுப்பி வைக்க வேண்டும் என்று எப்போதிருந்தோ எண்ணிய எண்ணம் வெடித்து வார்த்தைகளாக வெளிக்கிளம்பியது. உடனடியாக வீட்டுக்கு வந்து தன் கணவன் கொலின்ரசுடன் சண்டையிட ஆரம்பித்தாள். *பாருங்கள் பக்கத்துவீட்டு ரமேஷை. வெளிநாட்டுக்குச் சென்று எவ்வளவு பொருட்களுடன் வந்திருக்கின்றார். அவரது மனைவி எவ்வளவு நகைகளை அணிந்திருக்கின்றாள். நீங்களும் வெளிநாடு சென்று நன்றாக உழைத்து வரவேண்டும். நம்முடைய குடும்பத்தையும் நல்ல நிலைக்கு கொண்டு வரவேண்டும்* என்று பொரிந்தாள்.

இவை அனைத்தையும் அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்தான் கொலின்ரஸ். இப்போது எங்களுடைய வீட்டில் என்ன குறை இருக்கின்றது. மாதாந்த வருமானத்தில் குடும்பம் நன்றாக ஓடிக்கொண்டிருக்கின்றதே! ஆனாலும் இப்போது மனைவியுடன் எதையாவது பேசினால் அது பிரச்சினையைத் தான் கொண்டுவரும் என்று சிந்தித்து அமைதியாக இருந்தான். இந்த ஆடம்பர வாழ்க்கையின் மோகம் இறுதியில் என்ன செய்யும் என்பதனை அவளுக்கு எப்படியாவது புரிய வைக்க வேண்டும் என்று சிந்தித்துக் கொண்டிருந்தான். தேவ பக்தியுள்ளவனாகிய அவன் எப்படி குடும்பத்தை நடத்த வேண்டும் என்று நன்றாகவே அறிந்திருந்தான். அடுத்த நாள் காலையில் அவன் சில உதாரணங்களைக் கூறி மனைவிக்கு புரிய வைக்க முயன்றான். எமக்கு இப்போது எந்தக் குறையும் இல்லை, நான் இங்கே இல்லையென்றால் வீட்டுக்கு யார் உதவியாக இருப்பது? பிள்ளைகளை யார் கவனித்துக் கொள்வது? ஆபத்து என்றால் யார் கூட இருந்து கவனித்துக் கொள்வது?... இவன் காரணங்களை கூறியும் அது செவிடன் காதில் ஊதிய சங்காகவே கொன்சிக்கு இருந்தது.

எனவே வெளிநாட்டிற்கு ஆட்களை அனுப்பி வைக்கும் முகவர் ஒருவரை ஒருவாறு தேடிப்பிடித்தான். அவரிடம் இவனும் மனைவியுமாக சென்று வெளிநாடு செல்வது குறித்து பேசிய போது அவர் மிகவும் இனிமையாகப் பேசினார். கொலின்ரசுக்கு அவரது பேச்சில் நம்பிக்கை ஏற்படவில்லை. ஆனாலும் கொன்சி எப்படியாவது வெளிநாடு செல்ல வேண்டும் என்று விடாப்பிடியாக இருந்தாள். ஆகவே முகவர் கூறியதைப் போன்றுः முற்பணமாக மூன்று இலட்சம் செலுத்த வேண்டும். ஒருவாறு இருந்த நகைகளை விற்றும், கடன்களைப் பெற்றும் அந்த மூன்று இலட்சம் பணத்தைத் திரட்டி முகவரிடம் செலுத்தினர். பணத்தைப் பெற்றுக் கொண்ட முகவர் இன்னும் ஒரு மாதத்தில் விசா கிடைக்கும் என்று கூறினார். இவர்களும் பணத்தைக் கொடுத்துவிட்டு வீட்டுக்கு வந்து சேர்ந்தார்கள்.

நாட்கள் மிகவும் விரைவாக ஓடிக் கொண்டிருந்தது. ஒரு மாதம், கடந்தது, இரண்டு மாதம், மூன்று மாதம்... நாட்கள் சென்று கொண்டிருந்தது. ஆனால் விசா தான் கையில் கிடைக்கவில்லை. வரும் வரும் என்று காத்திருந்தவர்களுக்கு அப்போது தான் தெரிந்தது தாங்கள் ஏமாற்றப்பட்டு விட்டோம் என்பது. இப்போது கொன்சி நினைத்தாள்: ஐயோ! ஏமாந்துவிட்டோமே! கணவர் வெளிநாடு வேண்டாம் என்று சொல்லியும் கேட்காமல் ஆசைப்பட்டு ஏமாந்துபோய்விட்டோமே! இருந்த பணத்தையும் இழந்துவிட்டோம்! இந்த கடன்களை அடைக்க இனி என்ன செய்யப்போகின்றோம் என்று சிந்தித்தவளுக்கு தலை சுற்றிக் கொண்டிருந்தது. அப்போது கணவன் சொன்னான்: நான் சொன்னதை நீ ஏற்கனவே கேட்டிருந்தால் இப்படிப்பட்ட வேதனை வந்திருக்காது, இவ்வளது பணத்தையும் இழந்திருக்கமாட்டோமே! இருப்பதை விட்டுவிட்டு இல்லாததற்காக ஆசைப்பட்டு உள்ளதையும் இழந்து விட்டோமே என்றார்.

ஆம் நண்பர்களே! இந்த காலகட்டத்தில் இந்த குடும்பத்தைப் போலவே அனேக குடும்பங்கள் தங்களுக்கு இருக்கிறவைகள் போதுமென்று எண்ணாமல் அங்கும் இங்கும் அலைந்து திரிவதால் சில வேளைகளில் ஆண்டவர் அவர்களுக்கு செய்முறையிலேயே பாடங்களைக் கற்றுக் கொடுக்க வேண்டி ஏற்படுகின்றது. நாமோ நமக்கு இருக்கிறவைகள் போதுமென்று திருப்தியாக வாழும் பொழுது இருக்கிற காரியங்களைக் கொண்டு தேவன் எம்மை நிறைவாய் ஆசீர்வதித்து நடத்த வல்லமையுள்ளவராய் இருக்கின்றார். **எபிரெயர் 13:5 நீங்கள் பணஆசையில்லாதவர்களாய் நடந்து, உங்களுக்கு இருக்கிறவைகள் போதுமென்று எண்ணுங்கள்: நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை என்று அவர் சொல்லியிருக்கிறாரே.**

வை. விமல்

# குறுக்கெழுத்துப் போட்டி - 66

## சரியான பதில்கள்

**இடமிருந்து வலமாக**

03. எலேயாசார் - 1நாளா 23:21
07. ஈராம் - 1இரா 9:11
10. சித்தீம் - ஆதி 14:10
11. யாகேலின் - நியா 4:9

**வலமிருந்து இடமாக**

02. யெசுவாயோவாப் - எஸ் 2:6
04. தானியேல் - தானி 1:8
06. யெரோர்பெயாமின் - 11இரா 3:3
09. யெஸ்ரயேல் - யோசு 19:18
12. யோவாப் - 1நாளா 27:24

**மேலிருந்து கீழாக**

01. சிதேக்கியா - 11நாளா 36:13
02. யெப்தா - நியா 12:7
03. எக்லோன் - யோசு 10:34-35
08. நெகேமியா - நெகே 2:1

**கீழிருந்து மேலாக**

04. தானியேல் - தானி 10:17
12. யோனத்தான் - 11சாமு 21:21
13. மொர்தெகாய் - எஸ் 10:3

# யாருக்கு உபயோகம்?





**வாலிப உள்ளங்களுக்கு என் அன்பின் வாழ்த்துக்கள்!**

நவீன உலகில் வாழும் நாம் அன்றாடம் உபயோகப்படுத்தும் அனைத்தும் விஞ்ஞானத்தின் உச்ச நிலையைக் காண்பிக்கின்றது. மனிதனுடைய வேலைகளைச் செய்வதற்கும், நேரத்தை வீண் விரயம் ஆக்காமல் குறுகிய நேரத்தில் பலவேலைகளை ஒழுங்காக செய்யக்கூடிய அளவுக்கு பல சாதனங்கள் உருவாக்கப்பட்டாயிற்று. அதை நாம் அன்றாடம் அனுபவித்து வருகின்றோம்.

> **"உபயோகம் என்பது மற்றவர்களுக்கு பிரயோஜனம் என்று அர்த்தம் கொள்ளும்: நீ யாருக்கு பிரயோஜனமாக, உதவுபவனாக இருக்கின்றாய்?**

தோமஸ் அல்வா எடிசன் மின்குமிழைக் கண்டு பிடித்து விஞ்ஞான உலகில் பெரும் மாற்றத்தை உண்டாக்கியவர். இவரின் இந்த மகத்தான செயலால் இன்றும் பல நன்மையான காரியங்களை முழு உலகமும் அனுபவிக்கின்றது. இதற்காக அந்த மனிதன் பல நூறு தடவைகள தன்னுடைய பரிசோதனை முறையில் திருத்தத்தை

(மாற்றத்தை) செய்ய வேண்டி இருந்தது. ஆனாலும் அவர் அதைரியப்படவில்லை. ஒரே நோக்கம், ஒரே எண்ணம் மின்குமிழை எப்படியாவது ஒளிர வைக்க வேண்டும். அது உபயோகப்பட வேண்டும் என்பது மாத்திரமே.

**உபயோகம் என்பது மற்றவர்களுக்கு பிரயோஜனம் என்று அர்த்தம் கொள்ளும்.** நீ யாருக்குப் பிரயோஜனமாக, உதவுபவனாக இருக்கின்றாய்? ஒரு மெழுகு வர்த்தியை எடுத்தாலும் அல்லது ஒரு பேனாவை எடுத்தாலும் பிறருக்கு உபயோகமாகவே இருந்து தங்களிலுள்ள ஒளியை, பேனாவின் திரவத்தை செலவு செய்கின்றன. உபயோகம் என்பது உனக்காக நீ நன்மை பெறுவது அல்ல: மற்றவர்களுக்காக நீ உன்னை பிரயோஜனம் உள்ளவனாக உருவாக்குவதாகும்.

வேதாகமத்திலே உபயோகமாய் இருந்த சில கதாபாத்திரங்கள் மூலம் நாம் அறிந்து கொள்ள வேண்டியவைகள்.

சிறைப்பிடிக்கப்பட்ட பெண்! வேதம் இவளை அறிமுகம் செய்கின்ற போது கூட இவள் வாழும் நிலையும், பணியும் மனதின் நிலையையும் சுட்டிக்காட்டுகின்றது. அந்நிய தேசத்தில் ஓர் அநாதை. ஆதரவின்றி படைத்தலைவனின் மனைவிக்கு பணிவிடை. அப்படி இருந்தும் தன் தேவனுக்காக தன்னால் செய்ய இயன்றதைச் செய்கின்றாள்.

நாகமானின் குஷ்டம் நீங்க நல்வார்த்தை சொல்கின்றாள். அவனும் கீழ்ப்படிகின்றான், ஆசீர்வாதம் பெறுகின்றான். குழந்தையின் மாம்சம் போல் ஆகிவிட்டது நாகமானின் உடல். இன்றும் எத்தனையோ மக்கள் பலவிதமான குஷ்டத்தால் தவியாய் தவிக்கிறார்கள். யார் இருக்கிறார்கள் விடுதலையின் வழியை, சுகத்தின் செய்தியை கூற. இயேசு உண்டுபண்ணிய குணமாக்குதலையும், பாவமன்னிப்பையும், மனந்திரும்புதலையும் பிரசங்கம் பண்ணுவதற்கு இதுவே இன்றைய உலகின் தேவை. இயேசுவையும் அவர் தரும் இலவசமான இரட்சிப்பையும் இருளில் வாழும் மக்களுக்கு சுட்டிக்காட்ட வருவாயா?

**இங்கே ஒரு சிறுபையன் இருக்கிறான் - யோவான் 6:9**

boy (NIV) - *சிறுபையன்*

Lad (KJV) - *சிறுபையன் அல்லது இளைஞன்*

ஐந்து அப்பமும் இரண்டு மீன்களும் தன்வசம் வைத்திருந்த அவனை இயேசுவின் சீடர்கள் கண்டு கேட்ட போது அவன் அதை அவர்களிடம்

சந்தோஷமாக கையளிக்கின்றான். அவனுக்கு தெரியாதிருந்திருக்கலாம். இப்படி வியக்கத்தக்க ஓர் அற்புதம் நடக்கும் என்று. எதிர்காலத்தைக் குறித்த பயம் அற்றவனாக தனக்காகவே வாழாமல் தன்னால் முடிந்த ஆனால் மனப்பூர்வமாக அதை கொடுத்த போது வேதம் சொல்கின்றது: சாப்பிட்ட புருஷர் மாத்திரம் 5000 பேர் என்பதாக. மீதமாக 12 கூடை நிறைய எடுத்தார்கள்.

அருமைத் தம்பி தங்கையரே, ஏன் நீயும் உபயோகமாக இருக்க முடியாது. அறிந்தோ அறியாமலோ நன்மை செய்யக் கற்றுக்கொள். **வேதத்திலே இவர்கள் இருவருடைய பெயரும் சொல்லப்படவில்லை. சிறுபெண், சிறுபையன் என்பதாக மாத்திரமே கூறப்பட்டுள்ளது.** மத்தேயு, மாற்கு, லூக்கா சுவிசேஷ நூல்களில் சிறுபையன் என்று கூடக் கூறப்படவில்லை. ஆனால் தேவன் ஒரு போதும் மறக்கவில்லை: அவர் மறக்கமாட்டார். இயேசு சொன்னார்: நானே ஜீவ அப்பம் என்பதாக. மெய்யான போஜனம் என்பதாக. மனிதர்களின் சரீர, ஆவிக்குரிய தேவைகளைச் சந்திப்பதில் அவருக்கு அதிக பிரியம். உன் வாழ்விலும் மெய்யான அப்பமாகிய உனக்காக அடிக்கப்பட்ட, பிட்கப்பட்ட அவரை நோக்கிப்பார். தனிப்பட்ட நபருக்காக இருக்கலாம், அல்லது ஒரு கூட்ட மக்களுக்காக இருக்கலாம். அல்லது பெரும் திரளான மக்களுக்காக இருக்கலாம். தேவன் உன்னை உபயோகம் உள்ளவனாக(ளாக) உருவாக்குவார்.

உன் வாழ்விலும் மெய்யான அப்பமாகிய உனக்காக அடிக்கப்பட்ட, பிட்கப்பட்ட அவரை நோக்கிப்பார். தனிப்பட்ட நபருக்காக இருக்கலாம், அல்லது ஒரு கூட்ட மக்களுக்காக இருக்கலாம். அல்லது பெரும் திரளான மக்களுக்காக இருக்கலாம். தேவன் உன்னை உபயோகம் உள்ளவனாக(ளாக) உருவாக்குவார்.

**வேண்டாத காரியங்களை விட்டு தன்னை சுத்திகரித்துக் கொண்டவன்; (மெய்யாக மனம் திரும்புதலோடு) பரிசுத்தமாக்கப்பட்டதும், எஜமானுக்கு உபயோகமானதும், எந்த நற்கிரியைக்கும் ஆயத்தமாக்கப்பட்டதுமான கனத்திற்குரிய பாத்திரமாயிருப்பான் - 11தீமோத்தேயு 2:21.**








**நா**ன் செய்கிறது எனக்கே விருப்பமில்லை, நான் விரும்புகிறதைச் செய்யாமல் நான் வெறுக்கிறதையே செய்கிறேன் என்று ஒரு மனிதன் அங்கலாய்க்கிறான். காரணம்: செய்யக் கூடாது என்கின்ற காரியத்தை நாளாந்த வாழ்வினிலே தான் விரும்பாததைச் செய்கின்ற துர்ப்பாக்கிய நிலையிலே தான் இருப்பதை உணர்கிறான். நன்மை செய்ய வேண்டும் என்கிற விருப்பம் என்னிடத்தில் இருக்கிறது: நன்மை செய்வதோ என்னிடத்தில் இல்லை. ஆதலால் விரும்புகிற நன்மையைச் செய்யாமல், விரும்பாத தீமையைச் செய்கிறேன். காரணம்: நான் அல்ல எனக்குள் வாசமாயிருக்கிற பாவமே அப்படிச் செய்கிறது.

**அருமையான மகனே, மகளே! உன் வாழ்விலும் இப்படிப் பட்ட ஓர் நிலை காணப்படுமானால் அதற்கு காரணம்: பாவமே ஆகும். பாவம் என்பது மனிதனுக்கும் தேவனுக்கும் பிரிவினை உண்டாக்கி தேவன் விரும்பாததை நாம் செய்யப் பண்ணி நம்முடைய மாம்சத்தையும் கறைப்படுத்தும் ஓர் இழிவான செயலாகும்.**

வேண்டாத (கூடாத) செயல்களை நீ மேற்கொள்ள முடியாமல் ஒருவேளை தவித்துக் கொண்டிருப்பாயானால், விடுதலை பெற வழி தெரியாமல் அங்கலாய்த்தால்: உன்னை மீட்க, உனக்குப் புதுவாழ்வு தர ஒரு வழியுண்டு. அது தான் இயேசு கிறிஸ்துவின் சிலுவை மரணத்தினால் சம்பாதிக்கப்பட்ட நித்திய மீட்பும் பாவ மன்னிப்பும். இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மைச் சுத்திகரிக்கும். நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால் பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயங்களையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்.

**இயேசு கிறிஸ்துவே உன்னை விடுதலையாக்குவார்!**

ரேமா



# தேவன் மருத்துவச்சிகளுக்கு நன்மை செய்தார்!

**பெண்கள் பக்கம்**

- **மருத்துவச்சிகளின் வேலை என்ன?**
- **தேவன் மருத்துவச்சிகளுக்கு நன்மை செய்ய காரணம் என்ன?**

**மருத்துவச்சிகளின் வேலை: ஒரு பிரசவிக்க இருக்கின்ற தாயானவளுக்கு அருகில் இருந்து தாயையும் குழந்தையையும் கவனித்து அவர்களுக்கு உதவி செய்வது மட்டுமன்றி அவர்களை சுத்தம் செய்ய வேண்டும். எந்தவித அருவருப்புமின்றி மன நிறைவுடன் அவர்களுக்கு உதவி செய்து இருவரையும் காப்பாற்ற வேண்டும்.**

எகிப்து தேசத்தில் சிப்பிராள், பூவாள் என்னும் தேவனுக்கு பயந்த மருத்துவச்சிகள் தங்களுடைய கடமையை செய்து கொண்டு வரும் நாட்களில் இஸ்ரவேல் ஜனங்கள் பலத்து பெருகி வந்தார்கள்.

அந் நாட்களில் எகிப்தின் ராஜா, சிப்பிராள், பூவாள் என்னும் மருத்துவச்சிகளோடே பேசி ஆண் பிள்ளையானால் கொன்று போடுங்கள் என்று கட்டளை கொடுத்தான்.

**யாத்திராகமம் 1:17 மருத்துவச்சிகளோ, தேவனுக்குப்பயந்ததினால், எகிப்தின்ராஜா தங்களுக்கு இட்ட கட்டளைப்படி செய்யாமல், ஆண்பிள்ளைகளையும் உயிரோடே காப்பாற்றினார்கள்.**

மருத்துவச்சிகள் ராஜாவின் பிழையான காரியத்திற்கு ஒத்துப்போகாமல்

**மருத்துவச்சிகள் ராஜாவின் பிழையான காரியத்திற்கு ஒத்துப்போகாமல் தேவனுக்கு பயந்து, ஆண் பிள்ளைகளையும் காப்பாற்றியதன் நிமித்தம் மருத்துவச்சிகளின் குடும்பங்களை தேவன் தழைக்கும்படி செய்தார்.**

தேவனுக்கு பயந்து, ஆண பிள்ளைகளையும் காப்பாற்றியதன் நிமித்தம் மருத்துவச்சிகளின் குடும்பங்களை தேவன் தழைக்கும படி செய்தார். **யாத்திராகமம் 1:21 மருத்துவச்சி**

**கள் தேவனுக்குப் பயந்ததினால், அவர்களுடைய குடும்பங்கள் தழைக்கும்படி செய்தார்.**

ஒரு தோட்டத்தில் கஷ்டப்பட்டு கவனமாய் ஒரு மரத்தை வளர்த்து வரும் போது தற்செயலாய் அது பட்டுப்போவதைக் காணும் போது உள்ளத்தில் ஒரு ஏக்கம்! ஏன் என்ற கேள்வி எழும்பும் அல்லவா? அது பட்டுப்போகக் காரணம் என்ன என்பதை அறிந்து அதை நிவிர்த்தி செய்து திரும்பவும் அது தழைத்து வரவேண்டும் என்று முயற்சி எடுப்பது வழமை அல்லவா?

இதை வாசிக்கும் அருமையான சகோதரியே! ஒரு வேளை உன்னுடைய குடும்ப நிலையும் பட்டுப்போன மரத்தைப் போல அல்லது பட்டுக்கொண்டிருக்கும் மரத்தைப் போல உனக்குத் தென்படலாம். அனல் சஞ்சிகை உனக்கு ஒரு நல்ல செய்தி ஒன்றை தருகிறது! கவனமாய் தொடர்ந்து படித்துப்பார்.

> மருத்துவச்சிகள் எகிப்து ராஜாவின் கீழ் இருந்தாலும் ராஜாவின் பிழையான கட்டளைகளுக்கு கீழ்ப்படியாமல் தேவனுக்கு பயந்து செயற்பட்டபடியால் அவர்களுடைய குடும்பங்களைத் தேவன் தழைக்கும்படி செய்தார்.

**மருத்துவச்சிகள் தங்களுக்கு என்று தேவனால் கொடுக்கப்பட்ட அழைப்பில் இருந்து இறங்கவில்லை.** மருத்துவச்சிகளின் வேலை ஜீவனை காப்பாற்றுவது!: ஜீவனை அழிப்பதல்ல. இதில் மருத்துவச்சிகள் உறுதியாய் இருந்தார்கள். மருத்துவச்சிகள் எகிப்து ராஜாவின் கீழ் இருந்தாலும் ராஜாவின் பிழையான கட்டளைகளுக்கு கீழ்ப்படியாமல் தேவனுக்கு பயந்து செயற்பட்டபடியால் அவர்களுடைய குடும்பங்களைத் தேவன் தழைக்கும்படி செய்தார்.

சகோதரியே! கடந்த நாட்களில் நீயும் கூட பிழையான காரியங்களுக்கு ஒத்துப்போனாயா என்பதை சற்று சிந்தித்துப்பார். யாருக்கும் தெரியாது என்று நீ சிந்திக்கலாம். ஆனால் நீ பிழையான காரியத்துக்கு ஒத்துப்போனதை தேவன் அறிவார்.

1. கர்ப்பம் தரித்த பின் ஜீவனை அழிப்பது பாவம்!. இதற்கு நீ ஒத்துப்போனாயா?

2. விசுவாசிகளுக்கும்: அவிசுவாசிகளுக்கும் சம்பந்தம் இல்லை என வேதம் கூறுகின்றது. ஆனால் நீ இந்தக் காரியத்தில் ஒத்துப் போகின்றாயா?

3. சக விசுவாசிகளுடன் சேர்ந்து சபையின் சட்ட திட்டங்களுக்கு மாறாக நடக்க ஒத்துப்போனாயா?

4. தேவ ராஜ்யத்தை காயப் படுத்தியவர்களுடன் ஒத்துப் போகின்றாயா?

இப்படி தேவனுக்கு பிரியமற்ற காரியங்களுக்கு நீ ஒத்துப்போகின்றாயா? சிந்தித்துப்பார்! ஒரு வேளை நீ செயல் மூலம் ஒத்துப்போகாவிட்டாலும் சிந்தனையினால் நீ ஒத்துப்போகிறாயா?

உன்னுடைய வாழ்க்கையில் பிழையான காரியங்களுக்கு ஒத்துப்போகப்பண்ணுகிற ராஜாக்களை நீ இனங்கண்டு கொண்டு அவர்களுடன் ஒத்துப்போகாமல், மருத்துவச்சிகள் போல தேவனுக்கு பயந்து நடப்பாயானால் மருத்துவச்சிகளுக்கு நன்மை செய்த தேவன் உனக்கும் நன்மை செய்வார்.

மருத்துவச்சிகளுக்கு நன்மை செய்த தேவன் உனக்கும் நன்மை செய்ய ஆயத்தமாய் இருக்கின்றார். தேவன் மருத்துவச்சிகளுக்கு நன்மை செய்தபடியால் அவர்களுடைய குடும்பங்கள் தழைத்தன.

**உன்னுடைய குடும்பம் தழைக்க வேண்டும் என நீ விரும்புகின்றாயா? நீ செய்ய வேண்டிய காரியம்: முதலில் உன்னை நீ ஆராய்ந்து பார்த்து, தேவனுக்குப் பயப்படாமல் சிந்தனையினால், செய்கையினால் நீ செய்த பிழையான காரியங்களுக்காக தேவனிடத்தில் அறிக்கை செய்து விட்டுவிட தீர்மானம் எடு.**

ஒருபட்டுப்போகின்ற மரத்தை எப்படி மீண்டும் தழைக்க வைப்பதற்கு முயற்சி எடுப்பது போல தேவ வார்த்தைகளுக்கு நீ கீழ்ப்படிந்து நடக்கும் போது மருத்துவச்சிகளின் குடும்பத்தை தேவன் தழைக்கப் பண்ணியது போல உன் குடும்பத்தையும் தழைக்கப் பண்ணுவதை உன் கண்கள் காணும்.

**நீதிமொழிகள் 11:28b நீதிமான்களோ துளிரைப் போலே தழைப் பார்கள்.**

**திருமதி. J.பிலிப்**

## சரியான விடை எழுதியவர்கள்

01. எம்.கிளேறா - நாவற்குழி
02. சி.எப்சிபா - மீசாலை
03. சி.அபிகாயில் - மீசாலை
04. சி.அம்பாள் - மீசாலை
05. பா.தர்சினி - காரைநகர்
06. கே.போல்ராஜ் - காரைநகர்
07. கே.ஏஞ்சலீனா - காரைநகர்
08. க.றெஜிதா - காரைநகர்
09. பா.கோமதி - காரைநகர்
10. பா.அனுகரன் - காரைநகர்
11. அ.அனுசலா - காரைநகர்
12. ந.தயாழினி - காரைநகர்
13. அ.கிருசாந்தன் - காரைநகர்
14. அ.எஸ்தர் - காரைநகர்
15. உ.றஜிபன் - காரைநகர்
16. பா.அனுசியா - காரைநகர்
17. சு.சுதர்சினி - காரைநகர்
18. அ.கிறிஸ்ரீனா - காரைநகர்
19. அ.கிறிஸ்ரி ஜோன் - காரைநகர்
20. உ.யதுர்சி - காரைநகர்
21. செ.பிறேமிளா - காரைநகர்
22. செ.நந்தகுமார் - காரைநகர்
23. அ.வெரோனிக்கா - காரைநகர்
24. நா.சிவபாக்கியம் - காரைநகர்
25. அ.துர்க்கா - காரைநகர்
26. அ.தெபோரா - காரைநகர்
27. நா.கிறிஸ்தீனா - காரைநகர்
28. நா.கிறிஸ்ரீன் - காரைநகர்
29. அ.கிறிஸ்ரி பியூலா - காரைநகர்
30. அ.மேரிடொறின் - காரைநகர்
31. கோ.மங்களேஸ்வரி - காரைநகர்
32. கோ.இன்பவதனி - காரைநகர்
33. அ.கம்சிகா - காரைநகர்
34. செ.லோகநாதன் - காரைநகர்
35. லோ.வதனி - காரைநகர்
36. மேவின் பிரான்சிஸ் - மானிப்பாய்
37. கஸ்தூரி பிரான்சிஸ் - மானிப்பாய்

**வினா விடை - 68 -**

# நீ திகையாதே கலங்காதே!




**எ**ம்முடைய இப் பூவுலக வாழ்க்கைப் பாதையில் மானிடர்களாகிய நாம் பயப் படத்தக்க, கலங்கத்தக்க சூழ்நிலைகளை நாம் ஒவ்வொருவரும் சந்திக்க நேரிடுகின்ற காலங்கள் உண்டு. ஆனால் தேவனை விசுவாசித்து நம்புகின்ற நமக்கோ தேவன் நம்முடைய பயத்தையும், கலக்கத்தையும் நீக்கி அமைதியையும், மனப்பலத்தையும் அருளுகின்றார். ஆனால் அதை எப்போது நமக்கு செய்வார் என்பதனையும் நாம் அறிந்து கொள்ளுதல் அவசியம் ஆகும்.

**ஆதியாகமம் 15:1 இந்தக் காரியங்கள் நடந்தபின்பு, கர்த்தருடைய வார்த்தை ஆபிராமுக்குத் தரிசனத்திலே உண்டாகி, அவர்: ஆபிராமே, நீ பயப்படாதே: நான் உனக்குக் கேடகமும், உனக்கு மகா பெரிய பலனுமாயிருக்கிறேன் என்றார்.** பயப்படத்தக்க சூழ் நிலையில் பதற்றத்துடன் காணப் பட்ட ஆபிரகாமிடம் தேவன் வந்து பயப்படாதே எனக் கூறினார்.

ஆனால் தேவனை விசுவாசித்து நம்புகின்ற நமக்கோ தேவன் நம்முடைய பயத்தையும், கலக்கத்தையும் நீக்கி அமைதியையும், மனப்பலத்தையும் அருளுகின்றார்.

**யோசுவா 1:9 நான் உனக்குக் கட்டளையிடவில்லையா? பலங்கொண்டு திடமனதாயிரு: திகையாதே, கலங்காதே, நீ போகும் இடமெல்லாம் உன் தேவனாகிய கர்த்தர் உன்னோடே இருக்கிறார் என்றார்.** கலங்கவும் திகைக்கவும் தக்க

ஒரு சூழ் நிலையில் நின்ற யோசுவாவிடம் தேவன் வந்து கலங்காதே எனக்கூறி அவனை உற்சாகப்படுத்தி ஊக்கமாக நிற்கச் செய்தார்.

> “
>
> **யோவான் 14:1**
>
> **உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக: தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள், என்னிடத்திலும் விசுவாசமாயிருங்கள்.**

**யோவான் 14:1 உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக: தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள், என்னிடத்திலும் விசுவாசமாயிருங்கள்.** அடுத்து என்ன நடக்கப் போகின்றது என்று அறிய முடியாத சூழ்நிலையில் குழம்பிக் கொண்டிருந்த சீடர்களிடம் இயேசு உங்கள் இருதயம் கலங்காதிருப்ப தாக எனக் கூறிப் பெலப்படுத்தினார்.

அன்பு சகோதரா! சகோதரி! இது போன்ற இக்கட்டான சூழ் நிலைக்குள் நீங்கள் தள்ளப் பட்டிருக்கலாம். ஆபிரகாம், யோசுவா போன்றோர் தம் வாழ்க்கையை தேவனுக்கு ஒப்புக்கொடுத்து அவரிற்காக வாழ்ந்தார்கள். இதனால் தான் தேவன் அவர்களின் இக்கட்டான நிலைகளில் அவர்களின் பயத்தை, கலக்கத்தை நீக்கினார். இன்று நீ செய்ய வேண்டியது முதலாவது தேவனுடைய ஆளுகைக்குள் உன் வாழ்க்கையை ஒப்புக்கொடுத்து அவரிற்காக வாழ்வதே இவ்வுலக வாழ்க்கையில் எமது நோக்கமாக இருக்க வேண்டும். அப்போது தேவன் எம்முடைய பயங்களையும், கலக்கங்களையும், திகைப்புக்களையும் போக்கி எம்முடைய பாதையில் எது வந்தாலும் நம்மைக் கைவிடாமல் திடப்படுத்தி நிறுத்துவது உறுதியே.

**தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக.**

**J.கிறேசியன்.**




## ★ புதிய ஏற்பாட்டுத் திருச்சபை ★

## உதவிக்காரர்

சபைகளிலே மூப்பர்களைப் போல் உதவிக்காரர் இருந்ததையும் வேதாகமத்தில் காணலாம். **பிலிப்பி பட்டணத்தில் உள்ள சபையை அப்போஸ்தலனாகிய பவுல் வாழ்த்தும் போது, உதவிக்காரர் எனக்குறிப்பிடுவதை பிலிப்பியர் 1:1இல் காணலாம்.** இதே வண்ணம் *1தீமோத்தேயு 3:8*இலும் குறிக்கப்பட்டிருக்கின்றது. **எனவே இந்த உதவிக்காரரைப் பற்றி பார்ப்போம்.**

### 01. உதவிக்காரர் என்ற பதத்தின் அர்த்தம்:

உதவிக்காரர் (Deacon) என்பது "diakonos" என்ற கிரேக்க பதத்தின் மொழி பெயர்ப்பாகும். **இது சாதாரணமாக ஒரு வேலைக்காரன்** Servant **ஐயே குறிக்கின்றது.** ஆனால் இப் பதம் சபையில் காணப்படும் ஒரு ஸ்தானத்தைக் காண்பிக்க வேதத்தில் பாவிக்கப்பட்டுள்ளது. **யோவான் 2:5இல் கலியாணத்தில் சேவை செய்யும் வேலைக்காரர்களோடு சம்பந்தப்படுத்தி அல்லது தொடர்புபடுத்தி இது கூறப்படுகின்றது.** இது ஆளுகை செய்யும் அதிகாரிக்குப் பாவிக்கப்பட்டுள்ளது **ரோமர் 13:4. ஒவ்வொரு கிறிஸ்தவனும் ஒரு உதவிக்காரனாகவே அழைக்கப்படுகின்றான்.**

அதாவது இவ் வார்த்தை காண்பிக்கும் தோற்றத்தில் அல்லது பொதுவான கருத்துப்படி a Servant ஒரு வேலைக்காரன், சேவகன் diakonia **என்ற கிரேக்க பதத்தின் அர்த்தம்** Service – **சேவை. இதனை இவ்விதமாகவும் மொழி** பெயர்க்கலாம். I am waiting at the table **நான் மேசை ஓரத்தில் நிற்கின்றேன்.** ஏன் பரிமாறி சேவை/வேலை செய்ய. **எனவே** diakonos **என்ற பதம் பொதுவாக வேலைக்காரர்களையே குறிக்கிறது.** ஆனாலும் சபையில் காணப்படும் உதவிக்காரர் என்ற ஸ்தானத்தைக் குறிக்கவும் இது பயன்படுத்தப் படுகின்றது.

## 02. உதவிக்காரர்களின் ஊழியம்

மூப்பர்கள் சபையை ஆவிக்குரிய காரியங்களில் வழிநடத்துவது போல நடத்த உதவிக்காரர்கள் அழைக்கப்படவில்லை. **அத்துடன் இவர்கள் பொருளாதார விடயத்திலும் உயர்ந்த பதவியை வகிக்கவும் அழைக்கப்படவில்லை.** அப்போஸ்தலர் *11:29*இல் அந்தியோகியா சபையார் யூதேயாவிலுள்ள சகோதரருக்கு பணம் சேகரித்து அனுப்ப தீர்மானித்தார்கள். **இவர்கள் சேகரித்த பணத்தை சபையின் உதவிக்காரர்களிடம் ஒப்படைக்காமல் மூப்பர்களிடம் கொடுக்கிறார்கள்.** இந்தப் பணிக்கு சபையானது பர்னபாவையும் சவுலையும் தெரிந்து கொண்டு, அவர்கள் மூலமாக மூப்பர்களிடத்திற்கே கொடுத்து அனுப்பினார்கள். அப்போஸ்தலர் *11:27-30*

**இதில் இருந்து பண சம்பந்தமான விடயங்களிலும் மூப்பர்களே உள்ளூர் சபைகளில் பொறுப்பாக இருந்தார்கள் எனத் தெரிகிறது. அப்போஸ்தலர் 4:35. அப்படியாயின் உதவிக்காரர்களின் ஊழியம் என்ன?** நிதிப்பொறுப்பு மூப்பர்களிடம் ஆயின் அதை தேவை உள்ளவர்கள் மத்தியில் பகிர்ந்து கொடுப்பது உதவிக்காரரின் கடமை. **சபையின் எல்லா செயற்பாடுகளிலும் உதவியாய் இருப்பது.** இதனால் உதவிக்காரர்கள் சபையின் ஆவிக்குரிய விடயங்களில் உதவி செய்யும்படி அழைக்கப்படவில்லை என நினைக்கக்கூடாது.

**சபையின் நிதி சம்பந்தமானவைகளும், சபை மக்களோடு சம்பந்தமானவைகளும் ஆவிக்குரிய விதத்திலேயே கையாடப்பட வேண்டும்.** அப்போஸ்தலர் 6இல் காணப்படும் பந்திவிசாரிப்புக்காரர்களில் ஸ்தேவன் முதல் இரத்த சாட்சி. பிலிப்பு அநேகரை கிறிஸ்துவுக்காக ஆதாயப்படுத்தும் சுவிசேஷகன் ஆனான்.

**பெண்கள் உதவிக்காரர்களாக இருக்கலாமா? ஆம்** புதிய ஏற்பாட்டில் பெண்களில் பெயர் குறிக்கப்படுவது தற்செயலாக ஏற்பட்ட ஒன்று அல்ல என S.A.Newman கூறினார். **பவுல் ரோமர் 16:1இல் எழுதுவதைப் பாருங்கள்.** சபையில் சில பணிகள் இருக்கின்றன அவைகளைப் பெண்கள், ஆண்களைக் காட்டிலும் திறம்படச் செய்வார்கள். 1பேதுரு *4:10* நன்றாக சேவை செய்யும் உதவிக்காரர் கிருபையில் வளர்ந்து மூப்பர்களாக நியமிக்கப்படலாம். **இதற்கு தேவனுடைய திட்டமான அழைப்பு வேண்டும்.**

ஒன்றை நாம் நினைத்துக் கொள்ள வேண்டும். அதாவது நாம் சகோதரர்கள், வேலைக்காரர்கள். **ஒருவனிலும் இன்னொருவன் மேற்பட்டவன் அல்ல.** ஆனால் தேவனுக்கு சேவை செய்யும் போது வெவ்வேறு நிலைகளில் தேவன் நம்மை வைக்கிறார் அவ்வளவு தான். **நாம் எல்லோரும் சமமானவர்கள்.** உதவிக்காரர்களைக் குறித்து ஒரு அருமையான வசனம் உண்டு: **1தீமோத்தேயு 3:13 இப்படி உதவிக்காரருடைய ஊழியத்தை நன்றாய்ச் செய்கிறவர்கள் தங்களுக்கு நல்ல நிலையையும், கிறிஸ்து இயேசுவைப்பற்றும் விசுவாசத்தில் மிகுந்த தைரியத்தையும் அடைவார்கள்.**

## 03. உதவிக்காரரின் குணஇயல்பு

எருசலேம் சபையானது பந்திவிசாரணைக்குச் சரியான தகுதியுள்ளவர்களைத் தெரிந்தெடுப்பதில் கவனமாக இருந்தது. **இப் பணிக்குத் தெரிந்தெடுக்கப்பட்டவர்கள் எப்படிப்பட்டவர்கள் என்பதை அப்போஸ்தலர் 6:3 காண்பிக்கின்றது.**

1. பரிசுத்த ஆவியினால் நிறைந்தவர்கள்.
2. ஞானம் உள்ளவர்கள்
3. நற்சாட்சி பெற்றிருக்கிறவர்கள்.

**ஓர் உதவிக்காரனில் காணப்படவேண்டிய தகமைகள் 1தீமோத்தேயு 3:8-12 வரையுள்ள வசனங்களில் காணலாம்.**

இவ் வேத வாக்கியத்தில் இருந்து ஒரு உதவிக்காரன் நல்ல கிறிஸ்தவ தகமைகளைக் கொண்டு இருக்க வேண்டும் என அறியலாம். **இப்படி இருந்தால் தான் அவனது சபையைச் சேர்ந்த மக்கள் அவனை நம்புவார்கள்.** மாத்திரம் அல்ல சபைக்கு வெளியே இருக்கும் மக்களும் அவனது நீதியான வாழ்க்கையைக் கண்டும் அவனை நம்புவார்கள்.

**சபையானது உதவிக்காரர்களைத் தெரிவு செய்யும் போது பரிசுத்த ஆவியானவர் கொடுத்த இந்த விதிமுறைகளைப் பின்பற்ற வேண்டும்.** ஏதாவது ஒரு தகமை குறைவுபட்டால் இப் பணியில் தொடர்ந்து இருப்பது உதவிக்காரனுக்கு கஷ்டமாக இருக்கும். **இந் நிலை சபைக்கு கஷ்டத்தை உண்டுபண்ணும் சில வேளைகளில் அது கடுமையானதாகவும் இருக்கும்.** சபைக்கு ஆவிக்குரிய ரீதியில் தகுதிபடைத்த உதவிக்காரர் தான் தேவை.


**தாங்கள் தான் ஆண்டவர்மாராக இருக்க வேண்டும் என்ற எண்ணம் உடையவர்கள் சபையில் எந்தப் பதவிக்கும் தகுதியற்றவர்கள்.** மற்றவனுக்கு ஊழியம் செய்ய வேண்டும் என்ற எண்ணம் உடையவனே திறமையான தலைவனாக திகழமுடியும். **இப்படிப்பட்ட பதவிகளுக்கு தேவனால் அழைப்புப் பெற்றவர்கள் சபையில் காணப்படுவார்கள்.** இவர்களிடம் தேவனால் கொடுக்கப்பட்ட தகமைகள் இருக்கும்.

**இப்படிப்பட்டவர்கள் இப் பதவிக்குப் பொருத்தம் உடையவர்களே.** அத்துடன் இவர்கள் தாழ்மையுள்ளவர்களாகவே எப்போதும் காணப்படுவார்கள். **ஒரு தாழ்மையுள்ள ஊழியக்காரன் சபைக்குள் ஒரு போதும் குழப்பம் உண்டு பண்ணமாட்டான்.**

(கர்த்தருடைய மகிமையில் பிரவேசித்த போதகர் எம்.எம்.இன்பரூபன்)

தொடரும்...

# குறுக்கெழுத்துப்போட்டி – 67




குறிப்பு:- 12வயதுக்கு மேற்பட்டவர்களே சுயமாக செய்த குறுக்கெழுத்துப் போட்டியை செய்து அனுப்பும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

- நன்றி -

## இடமிருந்து வலமாக

01. தரியு ராஜாவின் கட்டளையை மாற்றுகிறவனின் வீடு இவ்வாறு ஆக்கப்படும்
07. தரிசனத்தினால் பெலனற்றவன்
08. இத்சேயாரின் குமாரரில் ஒருவன்
11. அதோனியாவிடம் இது காணப்படுமாயின் அவன் சாகவேண்டும் என சாலமோன் கூறினான்

## வலமிருந்து இடமாக

03. நம்முடைய ....... வானத்தையும் பூமியையும் உண்டாக்கின கர்த்தருடைய நாமத்தில் உள்ளது
05. யூதா, பென்யமீன் தேசங்களில் 1000 பேருக்கும் 100 பேருக்கும் அதிபதிகளை வைத்தவன் (குழம்பியுள்ளது)
09. இவன் தூணுக்குத் தன் பெயரை வைத்தான்
13. யூதரைச் சக்கந்தம் பண்ணியவன்

## மேலிருந்து கீழாக

02. எஸ்தரை தன் குமாரத்தியாக எடுத்தவன்
04. இடிமுழக்க மக்களென்று பெயரிடப்பட்டவர்களில் ஒருவர்
10. இவன் ரதத்தை விட்டிறங்கி கால்நடையாய் ஓடிப்போனான்

## கீழிருந்து மேலாக


06. எலெயாசாரின் அப்பா
09. தாண் கோத்திரத்திலிருந்து கானானைச் சுற்றிப் பார்க்கப்போனது (குழம்பியுள்ளது)
12. 800 பேர்கள் மேல் விழுந்து அவர்களை ஒருமிக்க வெட்டியவன்
13. இவனின் ஸ்தானத்தில் மெனாகேம் ராஜாவானான்

# கர்த்தர் சொன்னால் செய்வார்!



## வேதப்பகுதி: மத்தேயு 11:27–30

**ச**னிக்கிழமை மாலை ரெஸ்ட்டாரண்ட் போய் டின்னர் சாப்பிடப் போகிறோம் என்று டேவியும், டான்சியும் மிகவும் சந்தோஷமாயிருந்தார்கள். ஆனால் சனிக்கிழமை மாலை சரியான மழை பெய்து கொண்டிருந்தது. டேவி இன்று நமக்கு ஏமாற்றம் தான். இப்படி மழை பெய்கிறதே. நாம் எப்படி ரெஸ்ட்டாரண்ட் போக முடியும்? என்றாள் டான்சி. டான்சி மழையைப் பற்றி ஏன் கவலைப்படுகிறாய்? அப்பா சொன்னால் நிச்சயம் செய்வார் என்று உனக்குத் தெரியாதா? என்ன மழை பெய்தாலும் இன்று அப்பா நம்மை ரெஸ்ட்டாரண்ட் அழைத்துப் போவார் என்றான் டேவி.



இது போலவே கர்த்தரை நம்புகிறவர்கள் சூழ்நிலைகளை அல்ல, கர்த்தர் சொன்னதைத்தான் நம்ப வேண்டும். அவர் நமக்கு சமாதானம், சந்தோஷம், பரிசுத்தம், வெற்றி ஆகியவைகளைத் தருவதாகச் சொல்லியிருக்கின்றார். எனவே எந்த சூழ்நிலையிலும் கர்த்தர் அவைகளை நமக்குத் தருவார் என்று விசுவாசிக்க வேண்டும்.

**சிந்தனைக்கு:- சில காரியங்கள் நமக்கு மிகவும் கடினமாகத் தோன்றலாம். ஆனால் கர்த்தர் நம்மோடிருந்தால் அவைகள் எளிதாகிவிடும்.**

நன்றி: "சின்னஞ்சிறு இதயங்களே கேளுங்கள்! – செப்டம்பர் 27




## எரிக் லிட்டல்

### 1902 – 1945

### நீங்கள் தான் சாட்சிகள்



**ஸ்**காட்லாந்து தேசத்திலுள்ள அர்மடேல் பட்டணம். அங்கு ஓர் சுவிசேஷக் கூட்டம். மக்கள் திரள் திரளாகச் சென்று கொண்டிருந்தனர். அக் கூட்டத்தில் பேசப்போவது யார்? ஓட்டப் பந்தயத்தின் சாதனை வீரன் எரிக் லிட்டல் என்பவர் தான் அந்நாளின் பிரசங்கியார். 100 மீ. ஓட்டத்தில் உலக சாதனை செய்தவர்.

கிறிஸ்துவின் மீதுள்ள தன் பற்றை உலகம் அறிய வேண்டுமென ஆவல் கொண்டதோடு, தன் விசுவாசத்தையும், வெற்றியின் காரணத்தையும் மக்களிடம் பறைசாற்றிக் கொண்டிருந்தார். அந்த சாட்சி அநேகரை கிறிஸ்துவிடம் வழிநடத்தியது.

ஸ்காட்லாந்து மிஷனெரிப் பெற்றோரின் செல்ல மகனாக சீனாவில் பிறந்தார். எடின்பரோவில் கல்வி கற்றார். இளம் வயதிலேயே விளையாட்டுத் துறையில் வெற்றிகளைக் குவித்தார். விடா முயற்சியில் தொடர் வெற்றிகள் குவிந்தன.

**1924ஆம் வருடம், பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் ஒலிம்பிக் போட்டிகள் ஆரம்பமாயின. அப்போட்டியில் பங்குபெற விரும்பிய அவருக்கு ஏமாற்றமே காத்திருந்தது. 100 மீற்றர் ஓட்டப் பந்தயத்திற்கான போட்டி. ஓய்வு நாளான ஞாயிற்றுக் கிழமையில் குறிக்கப்பட்டிருந்ததே அதற்குக் காரணம்.**


**உலகப் புகழா? தேவனுக்குக் கீழ்ப்படிவதா? சாட்சியாய் இருக்க வேண்டுமா? காட்சிப் பொருளாய் மாற வேண்டுமா? மனதிலே போராட்டம். ஆண்டவரின் நாளில் ஆகாத காரியங்களில் ஈடுபட அவர் மனம் இசையவில்லை.**

சாட்சியாய் வாழ்பவர்கள் சாதிப்பார்கள். ஆம் எரிக் லிட்டல் சாதித்தார். 100 மீற்றர் ஓட்டத்திற்கு பதிலாக மற்றொரு நாளில் நடந்த 400 மீற்றர் ஓட்டத்தில் ஓடித் தங்கப் பதக்கம் பெற்றார். உலக சாதனை புரிந்தார். கிறிஸ்துவின் போர் வீரராக சீனாவுக்கு மிஷனெரியாகச் சென்று அநேகரை இரட்சிப்பின் பாதையில் நடத்திய எரிக் லிட்டல் இதே நாள் பெப்ரவரி மாதம் 1945ஆம் ஆண்டு தன் பூலோக ஓட்டத்தை முடித்தார்.

**அன்பரே! சாட்சியான வாழ்வு வாழ இயேசு உங்களை அழைக்கிறாரல்லவா?**

**வாழ்விலிருந்து வாழ்வுக்கு: கிறிஸ்தவன் சாட்சியாக வாழாவிட்டால், காட்சி பொருளாய் மாறிவிடுவான் — வேதா**

*நன்றி: "மனிதர்களைத் தேடிய மாமனிதர்கள்" பெப்ரவரி 21*



## எலிசா அக்னியூ

## 1807 – 1883

## விதைக்கப்படும் வாழ்வு

இந்திய தேசத்திற்கு அருகாமையில் உள்ள நாடு இலங்கை. நான்கு பக்கமும் கடலால் சூழப்பட்டுள்ளதால் இதை தீவு என்று அழைக்கலாம். கடல் கடந்து வாணிபம் செய்வோர் பெருகியிருந்த காலத்தில் சுவிசேஷத்தை இலவசமாக கொண்டு சென்றார் ஆக்னியூ.

அமெரிக்க நாட்டில் பிறந்த இவர், 8 வயதிலேயே இறைப்பணிக்குத் தன்னை தயார் செய்தார். 32ஆம் வயது வரை தன் கல்விப் பணிகளை நியூயார்க் நகரத்தில் முடித்தார். ஆண்டவரின் சத்தம் காதினில் தொனிக்க இலங்கை நாட்டை நோக்கி 1839ஆம் ஆண்டு சுவிசேஷ வீராங்கனையாகப் புறப்பட்டார்.

**கல்விக்கூடம் ஒன்றின் முதல்வராக தனது பணியை ஆரம்பித்தார். 41 வருடங்கள் அப்பள்ளியின் பொறுப்பை மிகவும் சிறப்புடன் ஏற்று நடத்தினார். தான் கற்றுக் கொடுத்த பெண் பிள்ளைகளின் குழந்தைகளுக்கும், அவர்களது பேரப்பிள்ளைகளுக்கும் கற்றுக் கொடுக்கும் மாபெரும் பணியை மனநிறைவுடன் செய்தார். இதனால் "ஆயிரம் பெண் குழந்தைக**

**ளின் அம்மா" என்று அன்புடன் அழைக்கப்பட்டார். அக் காலத்தில் இவர் செய்த பணி மிகவும் சிறப்புடன் பாராட்டத்தக்கது.**

இவர் கல்விப் பணியோடு கர்த்தரின் களங்கமில்லா வார்த்தைகளை கனிவுடன் கற்றுக் கொடுத்தார். இதனால் சுமார் 600க்கும் மேற்பட்ட இளம் ஆக்னியூக்கள் உருவானார்கள். ஒவ்வொரு நாளும் தான் கற்றுக் கொடுத்த மக்களைச் சென்று பார்த்து அவர்களுடன் பேசுவது இவரது வழக்கம் ஆகும். அவர்களில் பலர் ஆசிரியர்களாகவும், பிரசங்கியாளர்களாகவும், மருத்துவர்களாகவும், வக்கீல்களாகவும், பிரபல தொழில் செய்பவர்களாகவும் மாறினார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

43வருடங்கள் இலங்கையிலேயே தங்கி, அங்கேயே ஊழியம் செய்து கோதுமை மணியாக விதைக்கப்பட்டார் ஆக்னியூ.

**அன்பரே! உங்கள் ஊழிய பணித்தளத்தைத் தேர்ந்தெடுத்துவிட்டீர்களா?**

**வாழ்விலிருந்து வாழ்வுக்கு: தன்னைத் தானே தியாகம் செய்வது, அன்றாடம் செலுத்த வேண்டிய விலைக்கிரயம் ஆகும். — ஆஸ்வால்டு சன்டர்ஸ**

*நன்றி: மனிதர்களைத் தேடிய மாமனிதர்கள்" ஃபெப்ரவரி 2*

# சரியான விடை எழுதியவர்கள்

01. எம்.கிளேறா – நாவற்குழி
02. சி.எப்சிபா – மீசாலை
03. சி.அபிகாயில் – மீசாலை
04. சி.அம்பாள் – மீசாலை
05. பா.தர்சினி – காரைநகர்
06. கே.போல்ராஜ் – காரைநகர்
07. கே.ஏஞ்சலீனா – காரைநகர்
08. க.றெஜிதா – காரைநகர்
09. பா.கோமதி – காரைநகர்
10. பா.அனுகரன் – காரைநகர்
11. அ.அனுசலா – காரைநகர்
12. ந.தயாழினி – காரைநகர்
13. அ.கிருசாந்தன் – காரைநகர்
14. அ.எஸ்தர் – காரைநகர்
15. உ.றஜிபன் – காரைநகர்
16. பா.அனுசியா – காரைநகர்
17. சு.சுதர்சினி – காரைநகர்
18. அ.கிறிஸ்ரீனா – காரைநகர்
19. அ.கிறிஸ்ரி ஜோன் – காரைநகர்
20. உ.யதுர்சி – காரைநகர்
21. செ.பிறேமிளா – காரைநகர்
22. செ.நந்தகுமார் – காரைநகர்
23. அ.வெரோனிக்கா – காரைநகர்
24. நா.சிவபாக்கியம் – காரைநகர்
25. அ.துர்க்கா – காரைநகர்
26. அ.தெபோரா – காரைநகர்
27. நா.கிறிஸ்தீனா – காரைநகர்
28. நா.கிறிஸ்ரீன் – காரைநகர்
29. அ.கிறிஸ்ரி பியூலா – காரைநகர்
30. அ.மோரிடொறின் – காரைநகர்
31. கோ.மங்களேஸ்வரி – காரைநகர்
32. கோ.இன்பவதனி – காரைநகர்
33. அ.கம்சிகா – காரைநகர்
34. செ.லோகநாதன் – காரைநகர்
35. லோ.வதனி – காரைநகர்
36. மேவின் பிரான்சிஸ் – மானிப்பாய்
37. கஸ்தூரி பிரான்சிஸ் – மானிப்பாய்
38. வி.நிதர்சனா – ஊர்காவற்றுறை
39. க.றெஜீவன் – ஊர்காவற்றுறை
40. க.விக்னேஸ்வரன் – ஊர்காவற்றுறை
41. வி.லர்மிளா – ஊர்காவற்றுறை
42. வி.நிதர்சனா – ஊர்காவற்றுறை

குறுக்கெழுத்துப் போட்டி - 66

# வினா விடை - 69

01. புறாவைப் போல புலம்பின ராஜா யார்?

02. சாத்தான் குடியிருக்கிற இடத்தில் கொல்லப்பட்டவன் யார்?

03. அப்பங்கள் வைக்க ஒரு பொன் மேஜையை உண்டாக்கின ராஜா யார்?

04. மிகவும் ஸ்தூலித்த மனுசனாயிருந்த ஒரு ராஜா யார்?

05. கொக்குகளின் குடியிருப்பு எங்கே?

06. சாலொமோன் தேவாலயம் கட்டின மலை எது?

07. ஆறு சிறகுள்ள ஒரு சிங்கத்தைக் கண்டது யார்?

08. அப்போஸ்தலனாகிய பவுலை அடிப்பித்த சேனாபதி யார்?

09. வீட்டிலே ஒளித்து வைக்கப்பட்ட பிள்ளை யார்?

10. இயேசு ஜெபம் பண்ணச் சென்ற மலை எது?

## வினாவிடை - 68 சரியான பதில்கள்

01. யோவான்ஸ்நானகன் - மாற்கு 1:4

02. கமாலியேல் - அப்போஸ்தலர் 5:34

03. சந்திரரோகி - மத்தேயு 17:15

04. இஸ்ரவேலருக்குள் - IIசாமு 24:13-15

05. சூரியனை அணிந்திருந்த ஸ்திரீ - வெளி 12:1-6

06. இயேசு கிறிஸ்து - மத்தேயு 4:1-2

07. தெர்த்துல்லு - அப்போஸ்தலர் 24:1

08. லேகியோன் பிசாசு பிடித்தவன் - லூக்கா 8:29

09. இஸ்மவேல் - ஆதியாகமம் 21:20-21

10. எசேக்கியேல் - எசேக்கியேல் 8:3




**1சாமுவேல் 15:22 அதற்குச் சாமுவேல்: கர்த்தருடைய சத்தத்துக்குக் கீழ்ப்படிகிறதைப் பார்க்கிலும், சர்வாங்க தகனங்களும் பலிகளும் கர்த்தருக்குப் பிரியமாயிருக்குமோ? பலியைப் பார்க்கிலும் கீழ்ப்படிதலும், ஆட்டுக்கடாக்களின் நிணத்தைப்பார்க்கிலும் செவி கொடுத்தலும் உத்தமம்.** ஆட்டுக் கடாக்களின் நிணத்தைப் பார்க்கிலும் செவி கொடுத்தலும் உத்தமம் என்று வசனத்தின் இறுதிப்பகுதி கூறுகின்றது. இன்றைய நாட்களில் மிகவும் அருகி வருகின்றதானதொரு காரியம் செவிகொடுத்தல் ஆகும். ஆனால் கிறிஸ்தவ வட்டாரத்தில் மிகவும் மேன்மையானதும், முக்கியமானதும் செவிகொடுத்தலாகும்.

ஆங்கில வேதாகமத்தில் (KJV) கவனமாய் செவிகொடுத்தல் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் பல வேளைகளில் கவனமாய் செவிகொடுத்தல், கேட்டல் அருகி வருகின்றதை நாம் அவதானிக்கின்றோம். வேதாகமத்தில் தேவன் எங்களிடத்தில் அதிகமாய், முக்கியமாய், கண்டிப்பாய் எதிர்பார்க்கின்ற காரியம் செவிகொடுத்தலாகும். சொல்கின்ற போது, சொல்கின்ற எல்லாவற்றையும் கேட்பதனால் அது செவிகொடுத்தல் என்று பொருள் படாது.

செவி கொடுத்தல் என்று சொல்கின்ற போது அதற்குள் என்னென்ன காரியங்கள் அடங்கியிருக்கின்றது என்றால் நாம் அதை கவனமாய் கேட்டு அதன்படி செய்து அல்லது கீழ்ப்படிகின்ற போது செவிகொடுத்தல் பூரணமாகின்றது. ஞாயிற்றுக் கிழமைகளில்

தேவாலயத்தில் பிரசங்கம் செய்யப்படுகின்ற போது கேட்கின்றோம், வேதப்படிப்புக்களைக் கேட்கின்றோம், வேதத்தை வாசிக்கின்ற போது, தியானிக்கின்ற போது, தீர்க்கதரிசனங்கள், வெளிப்படுத்தல்கள் ஊடாக கர்த்தர் எம்மோடு பேசுகின்றார். எல்லாவற்றையும் கேட்கின்றோம், செவிகொடுக்கின்றோம் உண்மை தான். ஆனால் ஆண்டவர் செவிகொடுத்தல் என்று கூறி எதிர்பார்க்கின்ற காரியம் என்னவென்றால்: நாம் கேட்பது மாத்திரமல்ல, கேட்டுக்கொண்டிருப்பது மாத்திரமல்ல, நாம் கேட்கும் காரியங்களுக்கு கீழ்ப்படிந்து அதனை நடைமுறைப்படுத்துகின்றோமா என்று தான் கர்த்தர் எம்மிடம் எதிர்பார்க்கின்றார். ஆகவே செவிகொடுத்தல் என்றால் கேட்பதோடு மாத்திரம் நின்றுவிடாமல் கேட்பதை நடைமுறைப்படுத்த வேண்டும்.

1சாமுவேல் 15ஆம் அதிகாரத்தில் தேவனால் அபிஷேகம் பண்ணப்பட்ட ஒரு தேவனுடைய தீர்க்கதரிசி சாமுவேல். இவர் பெயர் பெற்ற பிரபலமான, பெரிய தீர்க்கதரிசி. சவுல் ராஜாவையும் அபிஷேகம் பண்ணினவரும் இந்த தீர்க்கதரிசி தான். இவர் சவுல் ராஜாவிடம் வந்து தேவனுடைய வார்த்தையை உரைக்கின்றார். **1சாமுவேல் 15:2-3 (2.) சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்: இஸ்ரவேலர் எகிப்திலிருந்து வந்தபோது, அமலேக்கு அவர்களுக்கு வழிமறித்த செய்கையை மனதிலே வைத்திருக்கிறேன். 3. இப்பொழு தும் நீ போய், அமலேக்கை மடங்கடித்து, அவனுக்கு உண்டான எல்லாவற்றையும் சாங்கரித்து, அவன்மேல் இரக்கம் வைக்காமல், புருஷரையும், ஸ்திரீகளையும், பிள்ளைகளையும், குழந்தைகளையும், மாடுகளையும், ஆடுகளையும், ஒட்டகங்களையும், கழுதைகளையும் கொன்றுபோடக்கடவாய் என்கிறார் என்று சொன்னான்.** யாரால் இந்த ராஜா அபிஷேகம் பண்ணப்பட்டாரோ அதே தீர்க்கதரிசி சவுல் ராஜாவிடம் வந்து தேவனுடைய வார்த்தையைத் தெரிவிக்கின்றார். இந்த சவுல் தேவனால் அபிஷேகம் பண்ணப்பட்டவர். சமஸ்த இஸ்ரவேலுக்கும் ராஜாவாக நியமிக்கப்பட்டவர். சாமுவேல் தேவனுடைய திட்டங்களையும், அவருடைய பாதைகளையும் தெரிவிக்கின்ற ஒரு தேவ மனிதன் தான். ஆனால் ஆண்டவர் சவுலை இஸ்ரவேலுக்கு ராஜாவாக ஏற்படுத்தி அவனை உயர்த்தி வைத்திருந்தார்.

ஆனாலும் இந்தக் கட்டத்திலே ஆண்டவர் சவுலின் மூலம் தான் செய்ய நினைத்ததை சொப்பனத்தின் மூலமாகவோ, தரிசனத்தின் மூலமாகவோ அல்லது கர்த்தருடைய வார்த்தையின் ஊடாக நேரடியாக சவுலுக்கு போதிக்கவில்லை. மாறாக ஆண்டவர் தான் செய்ய நினைத்த காரியத்தை, தேவமனிதனுக்கு ஊடாக சமஸ்த இஸ்ரவேலின் ராஜாவுக்கு கட்டளையிடுகின்றார். சவுலே நீ சென்று: அமலேக்கியரை மடங்கடி, சங்கரி, தப்பவிடாதே! என்று கட்டளையிடுகின்றார். இவ்வாறு தேவனுடைய கட்டளையை, வார்த்தையை பெற்றுக் கொண்ட சவுல் ராஜா என்ன செய்கின்றார் என்று பார்த்தால், **1சாமுவேல் 15:4 அப்பொழுது சவுல்: இதை ஜனங்களுக்கு அறியப்படுத்தி, தெலாயிமிலே அவர்களைத் தொகைபார்த்தான்: அவர்கள் இரண்டு லட்சம் காலாட்களும், யூதா ஜனங்கள் பதினாயிரம்பேருமாயிருந்தார்கள்.** சவுல் அதனை ஜனங்களுக்கு அறியப்படுத்தினான். ஆகவே தான் கேட்டதை, பெற்றுக் கொண்டதை,

தனக்கு கிடைத்த கட்டளைகளை ஜனங்களுக்கு தெரிவிக்கின்றான்.

எனவே ஜனங்களுக்கு அறிவித்த பிற்பாடு அவர்களை தொகையிட்டு எல்லோரும் யுத்தத்திற்கு சென்று, அங்கே எல்லாவற்றையும் செய்து முடித்துவிட்டு திரும்பி வந்தார்கள். அவ்வாறு சென்று வந்த பின் சவுல் அறிக்கையிடுகின்றான்: **1சாமுவேல் 15:13 சாமுவேல் சவுலினிடத்தில் போனான்: சவுல் அவனை நோக்கி: நீர் கர்த்தரால் ஆசிர்வதிக்கப்பட்டவர்: கர்த்தருடைய வார்த்தையை நிறைவேற்றினேன் என்றான்.** சவுல் ராஜா, கர்த்தருடைய வார்த்தையை நிறைவேற்றினேன் என்று அறிக்கையிடுகின்றான். ஆனாலும் இந்த அறிக்கை கர்த்தருடைய பார்வையில் எப்படி இருந்தது என்பதை **1சாமுவேல் 15:22 அதற்குச் சாமுவேல்: கர்த்தருடைய சத்தத்துக்குக் கீழ்ப்படிகிறதைப் பார்க்கிலும், சர்வாங்க தகனாங்களும் பலிகளும் கர்த்தருக்குப் பிரியமாயிருக்குமோ? பலியைப் பார்க்கிலும் கீழ்ப்படிதலும், ஆட்டுக்கடாக்களின் நிணத்தைப் பார்க்கிலும் செவி கொடுத்தலும் உத்தமம்.** என சொல்வதைக் காணலாம்.

இங்கே சவுல் ஆண்டவருக்கு கீழ்ப்படியவில்லை, அவருக்கு செவி கொடுக்கவில்லை. சவுலுடைய பார்வையில் கர்த்தருடைய கட்டளையை நிறைவேற்றிவிட்டார். ஆனால் தேவனுடைய பார்வையிலோ சவுல் செவிகொடுக்கவில்லை. ஆகவே தேவனுடைய பிள்ளைகளே இந்த கூற்றைப் புரிந்து கொள்ளுங்கள். முழுமையாக கீழ்ப்படியாமையும் தேவனுடைய பார்வையில் நீ செவிகொடுக்க வில்லை என்று தான் அர்த்தப்படும். சவுல் ராஜா 75 வீதம் அல்லது 90 வீதம் நிறைவேற்றினார். ஆனால் தேவனுடைய பார்வையில் சவுல் ராஜா செவிகொடுக்க வில்லை. **1சாமுவேல் 15:22** செவிகொடுத தல் உத்தமம் என்று கூறப்பட்டிருப் பதனைக் காணலாம். செவிகொடுத் தலும் என்ற வார்த்தையிலே சாமு வேல் தீர்க்கதரிசி செவிகொடுத்தலை உயர்த்தி அல்லது மேண்மைப்படுத்தி காண்பிக்கின்றார். இன்றைக்கு தேவனுடைய பிள்ளைகளாகிய நாங்கள் ஒன்றைப் புரிந்து கொள்ள வேண்டும். செவி கொடுத்தல் என்பது தேவனுடைய பார்வையிலே மேண்மையானதாக, உத்தமமாக அல்லது மேலானதாக காணப்படுகின்றது. வேதாகமமே மேன்மைப்படுத்திக் கூறியிருக்கும் இந்த செவிகொடுத்தலை நாம் பலவேளைகளில் சாதாரணம் என்று சிந்திக்கின்றோம். அதனை அலட்சியப்படுத்துகின்றோம். இது பொதுவான விடயம் தானே, ஏற்கனவே கூறியதைத் தானே திரும்பவும் கூறுகின்றார்கள், எப்போதும் கேட்டு கேட்டு குளிர்ந்து போய்விட்டது என்பது போன்ற மனநிலை எமக்குள் காணப்படுகின்றதா? நாம் இன்றைக்கு புரிந்து கொள்ள வேண்டியது, சாமுவேல் தீர்க்கதரிசி சவுல் ராஜாவுக்கு செவிகொடுத்தலும் உத்தமமானது என்று மேன்மைப் படுத்திக் காண்பித்திருப்பதினால் தேவனுடைய பிள்ளைகளாகிய நாம் செவிகொடுத்தல் மேலானது என்பதனை புரிந்து கொள்ள வேண்டும்.

உத்தமம் என்ற வார்த்தை வேதாகமத்தில் அனேகமாக பயன் படுத்தப்பட்டிருக்கின்றது. அது ஒரு உச்சக்கட்ட நிலைமையை காண்பிக்

கின்ற ஒரு சொல். எனவே செவிகொடுத்தல் என்று சொல்கின்ற போது கேட்பது மாத்திரமல்ல. கேட்டதற்கு கீழ்ப்படிந்து நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற எண்ணம் சிந்தனை எமக்குள் வரவேண்டும். செவிகொடுத்தல் என்பது ஒரு உச்சக்கட்ட நிலை. அது உன்னத நிலை, அத்துடன் அது தேவன் மேன்மையாக எதிர்பார்க்கின்ற ஒரு நிலையாகும். செவிகொடுத்தல் உத்தமமானது என்று மேன்மைப்படுத்தி சொல்கின்றபோது இன்னொரு காரியத்தோடு அதை ஒப்பிட்டுப் பார்க்கும் போது இதைப்பார்க்கிலும் உத்தமமானது, மேன்மையானது என்று அந்த வசனம சொல்கின்றது. ஆட்டுக் கடாக்களின் நிணத்தைப் பார்க்கிலும் செவிகொடுத்தல் உத்தமம் என்பதை சாமுவேல் தீர்க்கதரி சவுல் ராஜாவுக்கு எடுத்துக் காண்பிக்கின்றார்.

ஆட்டுக்கடாக்களின் நிணம் என்பது கொழுமையான பலி அல்லது தெரிவு செய்யப்பட்ட பலியைக் குறிக்கின்றது. ஆங்கில வேதாகமம் தெரிவு செய்யப் பட்ட கொழுமையான பலி என்று சொல்கின்றது. பழைய ஏற்பாட்டை பார்க்கின்ற வேளையில் ஆண்டவர் ஜனங்களிடம் எதிர்பார்ப்பது பலியாகும். சர்வாங்க தகனபலி, சமாதானபலி, பாவநிவாரண பலி என்று அநேக பலிகள் உண்டு. இது பழைய ஏற்பாட்டில் ஆண்டவர் கேட்ட, எதிர்பார்த்த ஒரு காரியம். ஆட்டுக்கடாக்களின் நிணம் என்று சொல்கின்ற போது இது ஒரு மேன்மையான பலி அப்படிப்பட்ட பலியை எதிர்பார்த்த ஆண்டவர் சாமுவேல் தீர்க்கதரிசியின் ஊடாக சமஸ்த இஸ்ரவேலுக்கும் ராஜாவாகிய சவுலுக்கும் சொல்கின்றார். அப்படிப்பட்ட மேன்மையான பலியைப் பார்க்கிலும் செவி கொடுத்தல் உத்தமம் என்பதாக.

**ஏசாயா 1:11 உங்கள் பலிகளின் திரள் எனக்கு என்னத்துக்கு என்று கர்த்தர் சொல்லுகிறார்: ஆட்டுக்கடாக்களின் தகனபலிகளும், கொழுத்த மிருகங்களின் நிணமும் எனக்கு அரோசிகமாயிருக்கிறது: காளைகள், ஆட்டுக்குட்டிகள், கடாக்களுடைய இரத்தத்தின்மேல் எனக்குப் பிரியமில்லை.** ஆனாலும் இவை எல்லாவற்றைப் பார்க்கிலும் ஆண்டவருடைய அழகான வார்த்தை சொல்கின்றது: **ஏசாயா 1:19 நீங்கள் மனம்பொருந்திச் செவிகொடுத்தால், தேசத்தின் நன்மையைப் புசிப்பீர்கள்.** ஆகவே பிரியமான தேவ பிள்ளைகளே, தேவன் பலியை எதிர்பார்க்கின்றார். பலி மனிதனால் செலுத்தப்பட வேண்டிய ஒன்று தான். ஆனால் அதைப் பார்க்கிலும் மனம்பொருந்தி செவிகொடுத்தலை தேவன் உயர்த்திக் காண்பிக்கின்றார். ஆங்கில வேதாகமத்தில் *willing and obedient* விருப்பத்தோடு கீழ்ப்படிந்து செவிகொடுத்தல் என்று சொல்லப்படுகின்றது. விருப்பத்தோடு செவி கொடுத்து கீழ்ப்படிகின்ற போது தேசத்தின் நன்மையை புசிக்க முடியும். நான் செவிகொடுக்கமாட்டேன், கீழ்ப்படியமாட்டேன், நடைமுறைப்படுத்த மாட்டேன் என்று எதிர்த்து நிற்பீர்களானால்: **ஏசாயா 1:20 மாட்டோம் என்று எதிர்த்து நிற்பீர்களாகில் பட்டயத்துக்கு இரையாவீர்கள்: கர்த்தரின் வாய் இதைச் சொல்லிற்று.** ஆகவே பிரியமானவர்களே, தகனபலி சர்வாங்க தகனபலிகள் எல்லாம் மேன்மையாக காணப்பட்டாலும் அவைகள் எல்லாவற்றையும் பார்க்கிலும் இந்த செவிகொடுத்தல் மேலானது என்பதை காண்பிக்கின்றது. செவிகொடுத்தால் தேசத்தின்

நன்மையைப் புசிப்பீர்கள்: செவி கொடுக்காவிட்டால் ஆண்டவரின் பட்டயத்திற்கு இரையாக வேண்டிய ஒரு சந்தர்ப்பம் ஏற்படலாம்.

**எரேமியா 7:22-23 (22.) நான் உங்கள் பிதாக்களை எகிப்துதேசத்திலிருந்து அழைத்துவந்த நாளிலே, தகனபலியைக்குறித்தும், மற்றப் பலிகளைக் குறித்தும் நான் அவர்களோடே பேசினதையும் கட்டளையிட்டதையும்பார்க்கிலும், 23. என் வாக்குக்குச் செவிகொடுங்கள், அப்பொழுது நான் உங்கள் தேவனாயிருப்பேன், நீங்கள் என் ஜனமாயிருப்பீர்கள்: நான் உங்களுக்குக் கற்பிக்கும் எல்லா வழியிலும், நீங்கள் உங்களுக்கு நன்மையுண்டாகும்படிக்கு நடவுங்கள் என்கிற விசேஷத்தையே அவர்களுக்குச் சொல்லிக் கட்டளையிட்டேன்.** பிதாக்களை அழைத்து வந்த நாட்களிலும் தகனபலிகளைக் குறித்தும் மற்றப்பலிகளைக் குறித்தும் ஆண்டவர்பேசியிருக்கின்றார்; கட்டளையிட்டிருக்கின்றார். ஆனாலும் சொல்கின்றார்: **என் வாக்குக்குச் செவி கொடுங்கள்.** ஆகவே தகனபலிகள் மற்றப்பலிகளை கர்த்தர் எதிர்பார்க்கின்றார், அது கர்த்தருடைய கட்டளை தான். ஆனாலும் அதைப் பார்க்கிலும் தன்னுடைய சத்தத்திற்கு செவி கொடுக்க வேண்டும் என்று தேவன் சொல்கின்றார். ஆகவே கிறிஸ்தவ வாழ்க்கையில் செவிகொடுத்தல் மேன்மையானது, கீழ்ப்படிதலை கர்த்தர் எம்மிடம் எதிர்பார்க்கின்றார் என்பதனை புரிந்து கொள்ள வேண்டும். பழைய ஏற்பாட்டில் பலி தான் மிகவும் முக்கியமானது. அதைவிட கீழ்ப்படிதல், செவி கொடுத்தல் முக்கியமானது என்றால் இன்றைக்கு புதிய ஏற்பாட்டில் செவிகொடுத்தல் - கீழ்ப்படிதல் எவ்வளவு முக்கியமானது என்பதனை புரிந்து கொள்ள வேண்டும்.

இன்றைக்கு பிரச்சினை என்னவென்றால், செவிகொடுக்கின்றதைப் பார்க்கிலும் ஜனங்களுக்கு அதிகமாய் பேசுவதற்கே விருப்பமாக இருக்கின்றது. உலகத்தில் இருக்கின்ற பல திருச்சபைகளை அவதானிக்கின்ற போது அங்கே மூன்று மணித்தியால துதிஆராதனை, தொடர் நமஸ்கார ஆராதனை, துதி ஆராதனைகளுக்கு பிரபல பாடகர்கள், பிரபல ஆராதனையை வழிநடத்துகின்றவர்கள் வருகின்றார்கள் என்று விளம்பரங்கள் செய்கின்ற போது ஜனக்கூட்டம் திரளாக வருவார்கள். ஆனால் ஆண்டவருடைய வார்த்தையைக் கேட்க வாருங்கள் என்று அழைக்கின்ற போது அப்படிப்பட்ட கூட்டத்தை காணமுடியாதிருக்கின்றது. ஏனென்றால் ஆராதனைகள் என்றால் தாங்களும் கதைக்கலாம், பேசலாம், சத்தமிடலாம். ஆனால் ஆண்டவருடைய வார்த்தையைக் கேட்க வேண்டுமென்றால் வாயை மூடிக் கொண்டு சத்தமிடாமல் இருக்க வேண்டும். பல வேளைகளில் ஆராதனையை நடத்துபவர்கள் வல்லமையாக நடத்துவார்கள். ஆனால் செய்தி நேரங்களில் அவர்களையும் காணமுடியாது. நான் சிலரைப் பார்த்திருக்கின்றேன், ஆராதனையில் தேவ செய்தி கொடுக்கப்பட்டுக் கொண்டிருக்கும் போது அவர்கள் ஆலயத்தில் இருக்கின்ற சிற்றுண்டி விற்பனை நிலையத்தில் தேநீர் அருந்திக் கொண்டிருப்பார்கள். தேவ வார்த்தையைக் கேட்க அவர்களுக்கு விருப்பமில்லை. அவர்கள் ஆராதனைகளை நடத்துகின்ற போது அவர்களது ஜெபம் பண்ணும் போது ஆண்டவரை போற்றுகின்ற வார்த்தைகள் இனிமையாயிருக்கும். ஆனால் தேவ செய்தியின் நேரத்தில் அவர்களைக் காணமுடியாது. இன்றைய கால கட்டத்தில் உலகத்தின் நிலை இது தான்.

செவிகொடுப்பது என்பது எமது பார்வையில் கஷ்டமான காரியம் தான். ஆனால் இதைத் தான்

தேவன் எம்மிடம் எதிர்பார்க்கின்றார். யாக்கோபு ஆதி திருச்சபையின் போதகர், அவர் வயது முதிர்ந்த மூப்பர். அவர் தனது ஆலோசனையை எழுதுகின்ற போது: **யாக்கோபு 1:19 ஆகையால், என் பிரியமான சகோதரரே, யாவரும் கேட்கிறதற்குத் தீவிரமாயும், பேசுகிறதற்குப் பொறுமையாயும், கோபிக்கிறதற்குத் தாமதமாயும் இருக்கக்கடவர்கள்** கிறிஸ்துவினால் இரட்சிக்கப்பட்டவர்களுக்கும், மனந்திரும்பியவர்களுக்கும் இதை எழுதுகின்றார். இன்றைக்கு எங்களுடைய வாழ்க்கையில் இவை நேர்மாறாக இருக்கின்றது. அதாவது கேட்பதற்கு பொறுமையாகவும் பேசுபவர்களாயின் தீவிரமாக பேசுகின்றவர்களாக இருக்கின்றோம். கேட்பதற்கு தீவிரமாயும் என்று சொல்கின்ற போது சொல்வதை எல்லாம் ஆர்வமாய். வாஞ்சையாய் அப்படியே உள்ளெடுத்து அதன்படி செய்கின்றது தான் தீவிர நிலமை ஆகும். கேட்பதற்கு அந்த தீவிர நிலமை எனக்கும் உங்களுக்கும் தேவையாக இருக்கின்றது. பல வேளைகளில் சண்டை செய்வதிலும், கேள்வி கேட்பதிலும் என்று பிரச்சினையைக் குறித்து கலந்தாலோசிப்பதிலும் தீவிர நிலமை காணப் படுகின்றது. கேட்கிறதற்கு எங்களுக்கு தீவிர நிலமை இருக்க வேண்டும்: பேசுவதற்கு பொறுமையாய் இருங்கள். அப்பொழுது கர்த்தர் உங்களை நிறைவாக ஆசீர்வதிப்பார்.

உதாரணமாக, வீதி ஒழுங்கைக் கடைப்பிடிக்கும் படி ஒளிச்சமிக்ஞை விளக்கில் பச்சை விளக்கு எரியும் போது நீங்கள் செல்லாது நின்றால் மற்றவர்களுக்கு இடையூறாக இருக்கும். மற்றவர்கள் செல்ல முடியாது அல்லது சிறிது நேரம் ஆபத்த-நிலையில் இருக்க முடியாது. வாகனத்தை நிறுத்திய நிலையில் வைத்திருந்து பச்சை விளக்கு எரியும் போது வாகனத்தை ஸ்ராட் செய்யும் போது அது ஸ்ராட் ஆகவில்லை என்றால் அந்த இடம் போக்குவரத்துக்கு தடைபட்டுவிடும். ஏனென்றால் ஆபத்தும் இல்லாமையினால் மற்றவர்களுக்கு முட்டுக்கட்டை, இடஞ்சலாக இருக்கும். ஆனால் சிவப்பு விளக்கு எரியும் போது நீங்கள் நிற்காமல் சென்றால் மற்றவர்களுக்கு அது ஆபத்தாக மாறிவிடும். உங்களால் அப்போது மற்றவர்கள் ஆபத்தை எதிர்நோக்க வேண்டிய நிலை. ஆகவே சரியான நேரத்தில் சரியாக செவி கொடுத்து, கீழ்ப்படிந்து செய்யாவிட்டால் அல்லது முழுமையான செவிகொடுத்தல் எங்களுடைய வாழ்க்கையில் இல்லை என்றால் மற்றவர்களுக்கு முட்டுக்கட்டையாகவோ அல்லது இடைஞ்சலாகவோ அல்லது ஆபத்தை விளைவிக்கிறவர்களாகவோ இருப்போம். எனவே சரியாக வீதி சமிக்ஞையை கடைப்பிடிக்கும் போது தான் எல்லோருக்கும் எந்தப் பிரச்சினையும் இருக்காது. ஆகவே பிரியமான தேவ ஜனமே சரியான நேரத்தில் சரியாக கீழ்ப்படிய வேண்டும் என்று தேவன் எதிர்பார்க்கின்றார்.

அடுத்து நாம் எதற்கு செவி கொடுக்க வேண்டும்? அல்லது யாருக்கு செவி கொடுக்க வேண்டும்? **சங்கீதம் 1:1a துன்மார்க்கருடைய ஆலோசனையில் நடவாமலும்**, இவ்வாறெனில், இதன் மறுபக்கம் என்ன வென்றால், நீதிமானுடைய ஆலோசனை யில் நடக்க வேண்டும். யாருக்கு செவிகொடுக்க வேண்டும் என்றால் நீதிமானுக்கு செவி கொடுத்து நீதிமானுடைய ஆலோசனையில் நடக்க வேண்டும். ஆட்டு மந்தையைக் குறித்து ஆண்டவர் வேதாகமத்தில் அழகாக காண்பித்திருக்கின்றார். ஆட்டு மந்தை தன் சொந்த மேய்ப்பனின் சத்தத்திற்கு கீழ்ப்படிந்திருக்கும். ஐந்து அறிவுள்ள ஆட்டு மந்தைகளே

...ப்படி செய்யும் என்றால் பகுத்தறிவுடன் உள்ள எங்களுக்கு எவ்வளவு அதிகமாய் இருக்க வேண்டும். ஆனால பிரச்சினை என்னவென்றால் ஆட்டு மந்தை மேய்ப்பனுக்கு அடிபணிந் திருக்கும், செவிகொடுக்கும். ஆனால் மனிதர்கள் செவி கொடுக்கமாட்டார்கள். தேவன் எங்களை மந்தையாக ஏற்படுத்தியிருக்கின்றார். ஆகவே தேவன் எந்த மந்தையில் உங்களை நியமித்திருக்கின்றாரோ அந்த மந்தையின் மேய்ப்பனுக்குத் தான் நீங்கள் சொந்தமாக இருக்கின்றீர்கள். எனவே அவரின் ஆலோசனையின்படி நடக்க வேண்டும். உலகத்தில் அனேகவிதமான மேய்ப்பர்கள் இருக்கின்றார்கள். ஆனால் எல்லா மேய்ப்பர்களும் எல்லா மந்தைகளுக்கும் மேய்ப்பர்கள் அல்ல. ஒருவருக்கு கொடுக்கப்பட்ட மந்தைக்கு தான் அவர் மேய்ப்பர். அதே போல மேய்ப்பர்கள் கவனமாக புரிந்து கொள்ள வேண்டும் எந்த மந்தைக்கு மேய்பனாக ஆண்டவர் உங்களை வைத்திருக்கின்றாரோ அந்த மந்தையை மேய்த்து கவனமாய் கவனிக்க வேண்டும்.

**யோவான் 8:47 தேவனால் உண்டானவன் தேவனுடைய வசனங்களுக்குச் செவிகொடுக்கிறான்: நீங்களும் தேவனால் உண்டாயிராதபடியினால் செவிகொடாமலிருக்கிறீர்கள் என்றார்.** தேவனுடைய கட்டளை, நியாயப் பிரமாணம், போதனைகள், கற்பித்தல்கள் இவற்றுக்கு நானும் நீங்களும் செவிகொடுத்து கீழ்ப்படிய வேண்டும். இன்றைக்கு பிரச்சினை என்னவென்றால் தேவனுடைய வசனத்துக்கு ஜனங்கள் செவிகொடுப்பதில்லை, கீழ்ப்படிவதில்லை. காரணம் என்னவென்றால்: தேவனுடைய வார்த்தைக்கு செவிகொடுத்தால், கீழ்ப்படிய வேண்டும், மனந்திரும்பிட வேண்டும் என்பதற்காக பலர் கேட்காமலே விட்டுவிடுகிறார்கள். எனவே தேவ பிள்ளைகள் தேவனுக்கும், நீதிமான்களுக்கும், நமக்கு தேவன் ஏற்படுத்தியிருக்கும் மேய்ப்பனுக்கும் மாத்திரமல்ல, தேவனுடைய வார்த்தைக்கும் செவி கொடுக்க வேண்டும்.

அத்தோடு, யார் செவி கொடுக்க வேண்டும்? **யோவான் 8:47 தேவனால் உண்டானவன் தேவனுடைய வசனங்களுக்குச் செவிகொடுக்கிறான்:** தேவனுடைய சமுகத்திற்கு வருகிறவர்களில் இரண்டு விதமான ஜனக் கூட்டம் இருக்கின்றது.

**1. தேவனால் உண்டானவர்கள்**

**2. தேவனால் உண்டாயிராதவர்கள்**

இன்றைக்கு நாம் நம்மை ஆராய்ந்து பார்க்க வேண்டும். தேவனை ஆராதிக்கின்ற நாங்கள் தேவனால் உண்டானவர்களா? அல்லது தேவனால் உண்டாயிராதவர்களா? தேவனால் உண்டானவர்கள் என்றால், தேவனுடைய வார்த்தைக்கும், நீதிமான்களுடைய வார்த்தைகளுக்கும், மேய்ப்பருடைய வார்த்தைக்கும் செவிகொடுப்போம். அவ்வாறு செவிகொடுக்கவில்லை என்றால் வேதம் தெளிவாக சொல்கின்றது: நாங்கள் தேவனால் உண்டாயிராதவர்கள். நாங்கள் சிந்திக்கின்றோம்: இரட்சிக்கப்பட்டவர்கள் அனைவரும் தேவனால் உண்டானவர்கள்: இரட்சிக்கப்படாதவர்கள் தேவனால் உண்டாயிராதவர்கள் என்பதாக. ஆனால் அந்த சிந்தனை சரியாக இருந்தாலும் இந்த வார்த்தைகளை இயேசு யாரோடு பேசினார் என்றால்: **யோவான் 8:31 இயேசு தம்மை விசுவாசித்த யூதர்களை**

நோக்கி: **நீங்கள் என் உபதேசத்தில் நிலைத்திருந்தால் மெய்யாகவே என் சீஷராயிருப்பீர்கள்** தம்மை விசுவாசித்தவர்களிடத்தில் பேசும்போது இவ்வாறு பேசினார்.

ஆகவே, நாம் இரட்சிக்கப்பட்டோமா இல்லையா என்பது பிரச்சினை இல்லை. தேவனை விசுவாசிக்கின்றோம், அவரை நம்பியிருக்கின்றோம். எங்களுடைய வாழ்க்கையை அவருக்கு ஒப்புக்கொடுத்திருக்கின்றோம். உண்மையான மனம்மாறுதல் எங்களுடைய வாழ்க்கையில் ஏற்பட்டிருக்கின்றது என்பதனை எதிலே கண்டு கொள்ள முடியும் என்றால் தேவனுடைய வசனத்திற்கு செவிகொடுத்து கீழ்ப்படிகின்ற வேளையிலேயே கண்டு கொள்ள முடியும். ஆகவே திருச்சபையிலும், விசுவாசிகளிலும் தேவனால் உண்டாயிருக்கிறவர்களும் உண்டு; உண்டாயிராதவர்களும் உண்டு. சரியாக இரட்சிக்கப்படாதவர்கள் தேவனுடைய வார்த்தைக்கு செவிகொடுத்து கீழ்ப்படியமாட்டார்கள். அப்படி வருபவர்கள் யார் தெரியுமா? அவர்கள் தான் பக்கவழியாய் வருபவர்கள். ஆகவே பிரியமானவர்களே, நீங்கள் ஒன்றைப் புரிந்து கொள்ள வேண்டும், தேவனுக்கும் தேவனால் ஏற்படுத்தப்பட்ட தலைவர்களுக்கும், நீதிமான்களுக்கும், தேவனுடைய வார்த்தைக்கும் செவி கொடுத்து அதன்படி நடக்கவில்லையென்றால் நாங்கள் தேவனால் உண்டாகவில்லை.

**தொடர்ந்து செவிகொடுப்பதால் எமக்கு வரும் பலாபலன்கள் அல்லது பிரதிபலன்களை என்னவென்று பார்த்தால்:** எல்லாவற்றிற்கும் ஒவ்வொரு விளைவுகள் உண்டு. வேதாகமத்தில் செவிகொடுத்தலுக்கு பலவிதமான விளைவுகள் காணப்படுகின்றது. **லூக்கா 1:31 இதோ, நீ கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாய், அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக.** கன்னிகையாகிய மரியாளிடம் தேவதூதன் இவ்வாறானதொரு செய்தியைக் கொண்டு வருகின்றான். உலக நியதியின்படி திருமணமாகாத ஒரு பெண் கர்ப்பவதியாவது ஒரு அவமானமான நிலை. எனக்கு அவமானம், நிந்தனை, எனக்கு நியமிக்கப்பட்டிருக்கும் யோசேப்பு என்ன சொல்லுவான் என்று நினைத்து வேண்டாம் என்று மரியாள் கூறியிருந்தால் நிலைமை எப்படி இருந்திருக்கும்? ஆனால் அவள் கூறிய பதில்: **லூக்கா 1:38 அதற்கு மரியாள்: இதோ, நான் ஆண்டவருக்கு அடிமை, உம்முடைய வார்த்தையின்படி எனக்கு ஆகக்கடவது என்றாள். அப்பொழுது தேவதூதன் அவளிடத்திலிருந்து போய்விட்டான்.** என்னதான் நிந்தனை, அவமானம் வந்தாலும் யார் என்ன சொன்னாலும் நான் ஆண்டவருக்கு அடிமை அவருடைய சத்தத்திற்கு நான் செவி கொடுப்பேன் என்றாள். பிரியமான வர்களே, செவி கொடுப்பதால் வரும் பலன்கள்: அவமானம், நிந்தனை, குடும்பத்தால் புறக்கணிக்கப்பட்ட நிலமை இது தான் செவிகொடுப் பதால் வரும் பலன்கள்.

**அப்போஸ்தலர் 9:3 அவன் பிரயாணமாய்ப் போய், தமஸ்குவுக்குச் சமீபித்தபோது, சடிதியிலே வானத்திலிருந்து ஒரு ஒளி அவனைச் சுற்றிப் பிரகாசித்தது.** சவுல் தேவனுடைய ஜனங்களை துன்புறுத்துவதற்காக தமஸ்குவிற்கு செல்கின்ற வழியில் கர்த்தருடைய வெளிச்சத்தினாலே சந்திக்கப்பட்ட வேளை ஆண்டவர் பேசுகின்ற வார்த்தையைக் கேட்டு மனம்மாறி, அனனியா என்ற தேவ மனிதன்

அவனுக்காய் ஜெபித்து, அதன் பிற்பாடு கிறிஸ்துவே தெய்வம் என்று பிரசங்கிக்க ஆரம்பிக்கின்றான். அவ் வேளையில் பிரச்சினை ஏற்படு கின்றது. **அப்போஸ்தலர் 9:26 சவுல் எருசலேமுக்கு வந்து, சீஷருடனே சேர்ந்து கொள்ளப் பார்த்தான்: அவர்கள் அவனைச் சீஷனென்று நம்பாமல் எல்லாரும் அவனுக்குப பயந்திருந்தார்கள்.** அவனை நம்பாமல் புறக்கணிக்கின்றார்கள். ஆண்டவரு டைய சத்தத்திற்கு செவிகொடுத்த தாலே நம்பவில்லை புறக்கணிக்கின் றார்கள். ஆகவே செவிகொடுத்து கீழ்ப்படிகின்ற போது மற்றவர்களை எங்களை நம்பாமல் புறக்கணிக் கலாம். ஆனாலும் தேவனுக்கு முதலிடம் கொடுக்க வேண்டும்.

**லூக்கா 4ஆம் அதிகாரத்தில்** இயேசு ஆவியானவராலே வனாந் தரத்திற்கு கொண்டு செல்லப்பட் டார். அவர் ஆவியானவரின் சத்தத் திற்கு செவிகொடுத்த போது சோதனை களை அவர் அனுபவித்தார். இயேசு பிதாவின் சத்தத்தைக் கேட்டு இந்தப் பூமிக்கு வந்து பாடுகளை அனுப வித்து மரித்து அடக்கம் பண்ணப் பட்டு மூன்றாம் நாள் உயிர்த் தெழுந்தார். பிதாவின் சதத்தத்தைக் கேட்டதனால்கஸ்டங்களை வேதனை களை இயேசு அனுபவித்தார்.

**ஆதியாகமம் 37:13-14 (13.) அப்பொழுது இஸ்ரவேல் யோசேப்பை நோக்கி: உன் சகோதரர் சீகேமிலே ஆடுகளை மேய்க்கிறார்கள் அல்லவா? உன்னை அவர்களிடத்துக்கு அனுப்புகி றேன், வா என்றான். அவன்: இதோ, போகிறேன் என்றான். 14. அப்பொழுது அவன்: நீ போய், உன் சகோதரருடைய ஷேமம் எப்படி என்றும், ஆடுகள் எப்படி இருக்கிறது என்றும் பார்த்து, எனக்கு மறுசெய்தி கொண்டுவா என்று அவனுக்குச் சொல்லி, எபிரோன் பள்ளத்தாக்கிலே இருந்து அவனை அனுப்பினான்: அந்தப் படியே அவன் சீகேமுக்குப் போனான்.** தகப்பன் யாக்கோபு யோசேப்பை அழைத்து உன் சகோதரரிடத்திற்கு சென்று சுகசெய்தியை விசாரித்து வரும்படி கட்டளையிடுகின்றார். அப்படியே யோசேப்பு செல்கின் றான். **ஆதியாகமம் 37:4 அவனுடைய சகோதரர் எல்லாரிலும் அவனைத் தங்கள் தகப்பன் அதிகமாய் நேசிக்கிறதை அவன் சகோதரர் கண்டபோது, அவனோடே பட்சமாய்ப் பேசாமல் அவனைப் பகைத்தார் கள்.** அவனுடைய சகோதரர்கள் அவனைப் பகைத்தார்கள். அவ னோடு அவர்கள் அன்பாக பேசவில்லை. ஆனாலும் அவன் தன் தகப்பனு டைய சத்தத்திற்கு கீழ்ப்படிந்து செல்கின்றான். அதன் விளைவு: **ஆதியாகமம் 37:26-27 (26.) அப்பொழுது யூதா தன் சகோதரரை நோக்கி: நாம் நம்முடைய சகோதரனைக் கொன்று, அவன் இரத்தத்தை மறைப்பதினால் லாபம் என்ன? 27. அவனை இந்த இஸ்மவேலருக்கு விற்றுப்போடுவோம் வாருங்கள்: நமது கை அவன்மேல் படாதிருப்பதாக: அவன் நம்முடைய சகோதரனும், நம்முடைய மாம்சமுமாய் இருக்கிறானே என்றான். அவன் சகோதரர் அவன் சொல்லுக்கு இணங்கினார்கள்.** அவன் சொல்ல வில்லை, நான் போகமாட்டேன், அவர்கள் என்னைப் பகைக்கின் றார்கள், அவர்கள் என்னோடு பட்சமாய் பேசவில்லை. அவன் அப்பாவின் சத்தத்திற்கு கீழ்ப்படிந்து சென்ற போது அவன் விற்கப்பட் டான்.

பிரியமானவர்களே, செவி கொடுக்கின்ற வேளையில் பிரச்சினைகள், நிந்தனைகள், அவமானங்கள், புறக்கணிப்புக்கள், நம்பிக்கையில்லா தன்மைகள், விற்கப்படல், பாரங்கள், வியாதிகள் வரலாம். செவிகொடுத்தலினால் வரும் பலன்கள் இவைகள் தான். ஆனாலும் இப்படிப்பட்ட பலன்கள் வந்தாலும் இந்த பலன்கள் முடிவல்ல. இவைகளைப் பார்க்கிலும் மேலான காரியத்தை கர்த்தர் உங்களுக்கு வைத்திருக்கின்றார்.

- மரியாள் அவமானம். நிந்தையை பொறுத்தபடியால் இந்த உலகத்திற்கு இரட்சகர் இயேசுவைக் கொண்டு வரும் பாக்கியமுள்ள ஸ்திரியாக. ஸ்திரிகளுக்குள் பாக்கியம் பெற்ற ஸ்திரியாக மாறினாள்.

- அப்போஸ்தலனாகிய பவுல் எவ்வளவு அற்புதங்களை. அதிசயங்களைச் செய்தார். கிறிஸ்துவுக்காக மரிக்கவும் ஆயத்தமானார். அவர் மேன்மையின் பாக்கியத்தை பெற்றுக் கொண்டார்.

- இயேசு கிறிஸ்து வேதனைப்பட்டார். மரித்து அடக்கம் பண்ணப்பட்டார். ஆனாலும் மூன்றாம் நாள் பாதாளத்தின் திறவு கோலையுடையவராக உயிர்த்தெழுந்தார்.

- யோசேப்பு விற்கப்பட்டான். அவன் வேதனை சொற்ப நாட்கள் தான். இறுதியிலே அவன் எகிப்திற்கு அதிபதியானான்.

பிரியமான தேவஜனமே, தேவனுக்கும் நீதிமானுக்கும் தேவன் எமக்கு ஏற்படுத்தியிருக்கும் மேய்ப்பனுக்கும் அதுமாத்திரமல்ல தேவனுடைய வார்த்தைக்கும் செவிகொடுக்கின்ற போது உங்களுடைய வாழ்க்கையிலே பிரச்சினை, நிந்தனை, அவமானம், நெருக்கம், புறக்கணிப்பு, நம்பிக்கையில்லாத தன்மைகள் எல்லாம் வரும். ஆனால் அவைகள் எல்லாம் சொற்ப காலங்களுக்குத் தான். அதற்கு உண்மையாய் நாங்கள் அர்ப்பணிக்கின்ற பொழுது. அவற்றை ஏற்றுக் கொள்கின்ற போது முடிவிலே கர்த்தர் எங்களை ஜெயமுள்ளவர்களாக. வெற்றி சிறந்தவர்களாக மாற்றவல்லமையுள்ளவராய் இருக்கின்றார். அவருடைய வருகை மிகவும் சமீபமாய் இருக்கின்றது! ஆயத்தமாவோம்!! ஆயத்தப்படுத்துவோம்!

"தேவன் தாமே உங்களை
ஆசீர்வதிப்பாராக"

**போதகர் ஜோஹறணன் டி.பிலிப்**
**தலைமைப் போதகர்,**
**சீயோன் தேவாலயம்,**
**யாழ்ப்பாணம்.**

# சந்தா விபரம்

இச் சஞ்சிகையைத் தொடர்ந்து பெற விரும்புகிறவர்கள் உங்களது பெயரையும் விலாசத்தையும் தெளிவாக எழுதி சந்தாப்பணத்துடன் ஆசிரியருக்கு அனுப்பினால் சந்தாதாரர்களாகச் சேர்க்கப்படுவீர்கள்.

## சந்தா விபரம் (தபால் செலவு உட்பட)

| | |
|---|---|
| இலங்கை | S.L Rs 220.00 Per Year |
| இந்தியா | S.L Rs 390.00 Per Year |
| கனடா, அமெரிக்கா | S.L Rs 840.00 Per Year |
| சிங்கப்பூர், மலேசியா | S.L Rs 420.00 Per Year |
| மத்திய கிழக்கு நாடுகள் | S.L Rs 510.00 Per Year |
| ஜேர்மனி, இங்கிலாந்து, இத்தாலி, அவுஸ்ரேலியா | S.L Rs 720.00 Per Year |

(காசோலை, காசுக்கட்டளை "சீயோன் தேவாலயம்" / "ZION CHURCH" என எழுதப்பட வேண்டும்)

**சந்தாதாரராக விரும்பின் கூப்பனை தயார் செய்து அனுப்பவும்**

## சந்தா கூப்பன்

பெயர்:-..........................................................

விலாசம்:-..........................................................

..........................................................

..........................................................

..........................................................

**தயவு செய்து சந்தா பணத்தையும் சேர்த்து அனுப்பவும்.**

Zion Church Office,
No. 347, Navalar Road,
Jaffna, Srilanka.

To

TO:
SIS. Y.THADSHAYINI,
ZION CHURCH,
JAFFNA.